வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු


Email : news@eelanadu.lk மலர் : 04 11.10.2023 புதன்கிழமை இதழ் : 305 பக்கங்கள் : 16




# கடன் மறுசீரமைப்பு; இணங்கியது சீனா!

பீஜிங், ஒக்ரோபர் 11

**இலங்கை பெற்ற கடன்களுக்கான மறுசீரமைப்புக்கு சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி (எக்ஸிம்) வங்கி இணங்கியுள்ளது. இதற்கான ஆரம்பகட்ட உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின் தெரிவித்துள்ளார்.**



இதனிடையே, சீனா தவிர இலங்கைக்கு கடன் வழங்கிய ஏனைய நாடுகளின் கடன் வழங்குநர்கள் இன்னும் ஒரு சில தினங்களில் இணக்கம் தெரிவிப்பர் என்று தெரிய வருகின்றது.

இந்த நிலையில், சீனாவின் வெளிவிவகார அமைச்சர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில், எக்ஸிம் வங்கி இலங்கையுடன் கடன் மறுசீரமைப்பு குறித்து இணக்கம் எட்டியுள்ளது என்றார். எனினும், முதல் கட்ட ஒப்பந்தத்தில்

11



## "ஐ. தே. கட்சிக்கு அடிபணிந்தது பெரமுன கட்சி"

கொழும்பு, ஒக். 11

சாகர காரியவசத்தின் தன்னிச்சையான செயல்பாடுகளால் பொதுஜன பெரமுன ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடிபணிந்துள்ளது என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று அவர் தனது கட்சியின் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு விட்டோம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நிர்வாகத்தை மக்கள் ஏற்றுக்

11

## மின்சார கட்டணம் இம்மாதம் உயரும்!

கொழும்பு, ஒக். 11

மின்சார சபையின் கோரிக்கைக்கு அமைவாக இந்த மாதம் முதல் மின் கட்டண அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கும் சாத்தியம் உள்ளது என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

கட்டண உயர்வுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் முதல் நடைமுறைக்கு வரும் என்று தெரிவித்த அதிகாரி, பொதுப்

11

## சகல மாணவர்களுக்கும் இலவச மதிய உணவு!

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

முல்லைத்தீவு, ஒக். 11



எதிர்காலத்தில் பாடசாலை சீருடை மற்றும் மதிய உணவு போன்ற கொடுப்பனவுகள் முறையாக அதிகரிக்கப்படும் எனவும், 2030ஆம் ஆண்டளவில் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் மதிய உணவு இலவசமாக வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - மல்லாவி மத்திய கல்லூரியில்

11

## பொருளாதார சுபீட்சத்தை நாம் அடைவதற்கு நாட்டின் பூகோள அமைவு, மனித வளமே வழி!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஒக். 11

இலங்கையின் பூகோள ரீதியான அமைவிடமும் மனித வளமும் மட்டுமே பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கான ஒரே வழி என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை கட்டியெழுப்புவதற்கு மனித வளத்தை அதிகபட்சமாக பயன்படுத்துவதே முக்கிய நோக்கம் என்று கூறினார்.

அத்துடன், சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற நாடுகள் மனிதவளத்தை சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் முன்னேற்றம் கண்டுள்ளன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இலங்கையில் பல்கலைக்கழக அமைப்பை நவீனமயமாக்கும் அதே வேளையில், தேவையான



தொழில் நுட்ப அறிவைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்கும் வகையில், புதிய அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் ஸ்தாபிக்கப்படும்

11

## பெரமுனவிலிருந்து விலகியவர்கள் மீண்டும் எம்முடன் இணையலாம்!

### நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, ஒக். 11

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் தரப்பினர் மீண்டும் எம்முடன் இணையலாம். கால அவகாசம் வழங்கப்படும். நாட்டுக்காகவே மாறுபட்ட அரசியல் கொள்கையை கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்துள்ளோம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை பணிமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை பஸில் ராஜபக்ஷவுடன் நடந்த பேச்சை தொடர்ந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சி என்ற ரீதியில் பலமாக செயல்படுகிறோம். அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களுக்கு தயாராகவே உள்ளோம். அதற்கான நடவடிக்கைகளை தற்போது முன்னெடுத்துள்ளோம். தேசிய தேர்தல்களில் கட்சியின் கொள்கையை

11

## சர்வதேச பல்கலைக்கழகங்களின் மருத்துவ பட்டப்படிப்புக்கு அனுமதி!

### அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 11

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் வழங்கப்படுகின்ற மருத்துவ பட்டப்படிப்பை இலங்கையில் ஏற்றுக்கொள்வதற்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டிய தரநியமங்கள் மற்றும் அளவுகோல்கள் உள்ளடங்கிய தேசிய கொள்கை ஒன்றைத் தயாரிப்பதற்காகவும், சமகால தேவைகளுக்கு பொருத்தமான வகையில் பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காகவும் பிரதமரின் செயலாளர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்காக கடந்த மே 2ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நியமிக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைகள் உள்ளடங்கலான அறிக்கையின் அடிப்படையில், சர்வதேச தரப்படுத்தலுக்கமைய இலக்கம் 01 தொடக்கம் 1000 வரையான பல்கலைக்

11



## இலங்கை வந்தார் ஜெய்சங்கர் திருகோணமலைக்கும் செல்வார்!

கொழும்பு, ஒக். 11


இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் நேற்று மாலை இலங்கை வந்தடைந்தார். இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் 23ஆவது அமைச்சர் மட்ட கூட்டம் இன்று

11

## இலங்கையின் பொருளாதார சீர்திருத்தம் பலனளிக்கிறது!

### சர்வதேச நாணய நிதியம்

நியூயோர்க், ஒக். 11



இலங்கை பொருளாதாரத்தில் ஓரளவு ஸ்திரதன்மையை எட்டியுள்ளது. எனினும், இலங்கையின் முழுமையான மீட்சி இன்னும் உறுதி செய்யப்படவில்லை - என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

மேலும், இலங்கை தொடர்ந்தும் தனது பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தற்போதைய திருத்தங்கள் பலனளிக்க ஆரம்பித்துள்ளன. என்றும் ஐ. எம். எவ். கூறியுள்ளது.

மொராக்கோவில் ஆரம்பமான சர்வதேச பொருளாதார மாநாட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆய்வு பிரிவு தலைவர் டானியல்லே இதனை தெரிவித்தார். (ஐ)

# இப்படியும் நடக்கிறது

ஒரு முன்கோபக்கார பையன் இருந்தான். எடுத்ததெற்கெல்லாம் அவனுக்குக் கோபம் வரும். கோபம் வந்தால் தலை கால் தெரியாமல் வாய்க்கு வந்த படி வயது வரம்பில்லாமல் எல்லோரையும் பேசி விடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப்படுவான்.

நாளடைவில் அவனை சுற்று வட்டாரத்தில் பலருக்கு இதனாலேயே பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். பையனுக்குத் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரியவில்லை.

அவனுடைய அப்பா பொறுத்துப் பொறுத்து பார்த்து விட்டு ஒருநாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார்.

ஒவ்வொரு முறை ஆத்திரப்படும் போதும் சம்பந்தப்பட்டவர்களைத் திட்டுவதைத் தவிர்த்து விட்டு வீட்டுக்குப் பின்னால் வேலியில் உள்ள மரத்தில் ஓர் ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றி விடும் படி அறிவுரைத்தார்.

முதல் நாள் மரத்தில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான். நாட்கள் செல்லச் செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொண்டான். கோபம் வந்தால் தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே!

நாளடைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப் பக்கம் போகு முன் கோபவெறி குறைந்து போய், மரத்தில் ஆணி அறைவது குறையத் தொடங்கி யது. சில நாட்களில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை.

அப்பாவிடம் போய் விவரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஓர் ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க அவனுக்கு முழுதாக ஒருநாள் பிடித்தது.

எல்லா ஆணியையும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் மரத்தைப் பார்க்கப் போனார்கள். அப்பா மரத்தில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி சொன்னார்,

'கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடுசொல்லும் இந்த ஆணியைப் போலத்தான். ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப் போலவே மறைவது மிகக் கடினம்' என்று அவனுக்கு எடுத்துக் கூறினார்.

இந்தக் கதையை நேற்று நண்பர் ஒருவர் எனக்கு மின் அஞ்சலில் அனுப்பியிருந்தார். ஏன் எதற்காக என்று எதுவும் குறிப்பிடவில்லை. சில வேளைகளில் இந்தப் பத்தியில் ஒரு சிறிய குட்டிக்கதைகளை முதலில் எழுதிவிட்ட பின்னர் சொல்லவருவதை எழுதுவதுண்டு. ஆனால், சில வேளைகளில் கதைகளை எழுதாமலும் விட்டுவிடுவதுண்டு. அதனால் நண்பர் பொருத்தமான வேளையில் பயன்படுத்துவேன் என்று அனுப்பியிருக்கலாம். எதற்கும் அவர் ஏதேனும் தேவை கருதி அனுப்பினாரோ என்பதை அறிய அவருடன் தொலைபேசியில் பேசினேன்.

அண்மையில், சில நாட்களாக இந்தப் பத்தியில் நாம் தெரிவித்து வந்தது பற்றிய தனது கருத்தை கதை மூலம் சொல்வதற்காக அனுப்பினாரோ என்ற சந்தேகம் எனக்கு.

பேசியபோதுதான் சொன்னார், 'அப்படி இல்லை, பொருத்தமான வேளையில் பயன்படுத்துவீர்களே. தினசரி கதைக்கு எங்கேதான் போவீர்கள்?' என்றார்.

அவருடன் கதைத்து சில நிமிடங்கள்தான் ஆகியிருக்கும் மற்றுமொரு நண்பரிடமிருந்து வட்ஸ்அப்பில் ஒரு தகவல். அது ஒரு முகநூல் இணைப்பு. வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் அவர்களின் முகநூல் பதிவு ஒன்றை அவர் அனுப்பியிருந்தார்.

'இடையிடையே கதவுகளை சாத்தும் இலகுவான போராட்ட வழிகள் தீர்வுகளை தரும் என நாம் இன்னமும் நம்புகின்ற சமூகம் போலும்' என்று இருந் தது அவரின் பதிவு.

மனித சங்கிலிப் போராட்டம் நடத்தி அது வெற்றிகரமான போராட்டமாக இல்லாமல் போனதையடுத்து தமிழ் தேசியக் கட்சிகள் ஹர்த்தால் நடத்துவது என்று முடிவெடுத்திருந்தன. இந்த முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் வினோ எம். பி. தனது முகநூலில் செய்த பதிவு இது. அவர் ஹர்த்தால் நடத்துவதை ஒரு வகையில் கேலி செய்திருக்கிறார். அவரே கேலி செய்த பின்னர் மக்களை ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு தாருங்கள் என்று தலைவர்கள் எப்படி கோரிக்கை விடுக்கின்றார்கள் என்பது தெரியவில்லை.

வினோ எம். பி. இப்படி பல முறை தமது கட்சியையும் (தன்னையும் சேர்த்துத்தான்) மற்றையை தலைவர்களையும் விமர்சித்திருக்கிறார்.

முன்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பாக மூன்று கட்சிகள் இயங்கிய போது தமிழரசின் சில தலைவர்கள் தன்னிச்சையாக பல காரியங்களை செய்கின்றனரென அடிக்கடி போர்க்கொடி தூக்கியவர்களில் முக்கியமானவர்கள் ரெலோ கட்சியினர். இப்போது அவர்களில் ஒருவர் கட்சியின் கட்டுப்பாட்டையும் மீறி தன்னிச்சையாக அறிக்கை விடுவதும் கருத்துச் சொல்வதையும் பார்த்துக் கொண்டிருக்கின்றது ரெலோ தலைமை.

மேலேயுள்ள கதையில் தனது மகனின் முன்கோபத்தை தவிர்க்க அந்தத் தந்தை ஓர் உத்தியைப் பயன்படுத்தியது போல, ரெலோ தலைவரும் எதையாவது செய்தால் நல்லது. அல்லது அவர் சொல்வதைக் கேட்டு தலைமை நடந்தாலும் நல்லதுதான்.

**-ஊர்க்குருவி.**

# இராணுவத்தின் 74ஆவது ஆண்டு; 1,879 பேருக்கு பதவி உயர்வுகள்!

கொழும்பு, ஒக். 11

இராணுவத்தின் 74ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 314 அதிகாரிகள் மற்றும் 1,565 சிப்பாய்களுக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் 74ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் விக்கும் லியனகே பரிந்துரையின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உத்தரவுக்கு அமைய இராணுவத்தின் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளை சேர்ந்த 314 அதிகாரிகள், 1565 சிப்பாய்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு பனாகொடை இராணுவ முகாமில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

பிரிகேடியர் நிலையிலிருந்த 7 அதிகாரிகள் மேஜர் ஜெனரல் தரத்துக்கும் 12 கேணல்கள் பிரிகேடியர் நிலைக்கும், 37 லெப். கேணல்கள் கேணல் தர நிலைக்கும், 41 மேஜர்கள் லெப். கேணல் நிலைக்கும், 50 கப்டன்கள் மேஜர் நிலைக்கும், 84 லெப்டினனட்கள் கப்டன் நிலைக்கும் மற்றும் 83 இரண்டாம் லெப்டினன்ட்கள் லெப்டினன்ட் நிலைக்கும் (நிரந்தர மற்றும் தொண்டர் படைகளின்) அதிகாரிகள் பிரிவில் இவ்வாறு நிலை உயர்வு பெற்றுள்ளனர்.

இதேவேளை 7 பிரிகேடியர்கள் இராணுவத்தின் இரண்டு நட்சத்திர மேஜர் ஜெனரல் நிலைக்கு நிலை உயர்வு பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கல்வி அமைச்சர் பங்கேற்பு!

தென்மராட்சி, ஒக். 11

தேசிய தொழில்கல்வி தகைமை சான்றிதழ் கற்கை நெறியை (என். வி. கியூ.) பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி பொன் விழா மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், வட மாகாண அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், வடமாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபால நதரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது தேசிய தொழிற் தகைமை கற்கை நெறியை பூர்த்தி செய்த 575 பேருக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# கரந்தெனிய இராணுவ முகாமிலிருந்து பெருந்தொகை தோட்டாக்கள் மாயம்!

கொழும்பு, ஒக். 11

கரந்தெனிய இராணுவ முகாமின் ஆயுத களஞ்சியத்திலிருந்த ரி-56 துப்பாக்கி உட்பட பல தோட்டாக்கள் காணாமல் போயுள்ளன. இது தொடர்பில் கரந்தெனிய பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தென் மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம் பெற்ற பல கொலைகள் கரந்தெனிய இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியத்திலிருந்து எடுக்கப்பட்ட ரி - 56 துப்பாக்கியால் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக இந்த ஆயுதக் கிடங்கின் காப்பாளரை இராணுவ பொலிஸார் கைது செய்துள்ளனர். கரந்தெனிய ஆயுதக் களஞ்சியசாலைக்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த சில ரி-56 தோட்டாக்கள் இராணுவப் பொலிஸாரால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த ஆயுதக் களஞ்சியத்திலிருந்து காணாமல் போன ரி- 56 துப்பாக்கி, பாதாள உலகக் குழுவினருக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

(ஐ)

## இஸ்ரேல் - பலஸ்தீன மோதல்:
# காணாமல்போன இலங்கை பெண் இறந்திருக்கலாம் என்று சந்தேகம்!

கொழும்பு, ஒக். 11

இஸ்ரேல் - பலஸ்தீன மோதலில் காணாமல் போனார் என்று கூறப்படும் இலங்கை பெண் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுவதாக இலங்கை வெளி நாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்களில் கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்தப் பெண் சுட்டு கொல்லப்பட்டார் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இவ்வாறு கொல்லப்பட்டார் என்று கருதப்படும் பெண் கம்பஹாவைச் சேர்ந்த 49 வயதான இரண்டு பிள்ளைகளின் தாயாவார்.

அவர் 2022 ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடாக இஸ்ரேலுக்கு தாதியாக பணிபுரிய சென்றுள்ளார்.

இஸ்ரேலின் தற்போதைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, இராஜதந்திர தலையீட்டின் அடிப்படையில் உயிரிழந்த பெண்ணின் சடலத்தை இலங்கைக்கு கொண்டு வர முடியும் என நம்புவதாக காமினி செனரத் யாப்பா தெரிவித்தார்.

மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திடம் இருந்து அவருக்கு வழங்க வேண்டிய அனைத்து காப்பீடு மற்றும் இழப்பீடு வழங்கப்படும் என்றும் கூறினார். (ஐ)

# 2 கோடி ரூபாய் பீடி இலைகளை கடத்தியவர் புத்தளத்தில் கைது

புத்தளம், ஒக். 11

புத்தளம், மதுரங்குளியில் சட்ட விரோதமான முறையில் பீடி இலைகளை கடத்த முயன்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கற்பிட்டி, மாம்புரி பிரதேசத்தில் இருந்து குளியாபிட்டிக்கு லொறி மூலம் சட்டவிரோதமாக பீடி இலைகளை கடத்த முற்பட்ட ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை மதுரங்குளி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த லொறி பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது 78 மூடைகளில் சூட்சுமமாக மறைத்து கடத்த திட்டமிட்டிருந்த சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியான பீடி இலைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய குருநாகல், அலவ்வை சேர்ந்த 34 வயதான ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இயந்திரப் படகு மூலம் பீடி இலைகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மதுரங்குளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஈழநாடு
Eelanadu
11.10.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் கட்சிகளிடமுள்ள திட்டம் என்ன?

அரசியல் சூழல் மாறிக்கொண்டிருக்கின்றது. சர்வதேச நிலைமைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. ஒரே நேரத்தில் இரண்டு யுத்த முனைகள் திறந்திருக்கின்றன. இரண்டும் ஐரோப்பாவுக்கு முக்கியமானது. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் கவனம் யுத்தத்தை நோக்கி குவிந்திருக்கின்றது. ஒருவேளை மிக நீண்டதொரு யுத்தத்தை இஸ்ரேல் எதிர்கொள்ளலாம். அதேவேளை, இஸ்ரேலின் யுத்தம் இஸ்ரேலுக்குரியதாக மட்டும் இருக்கப் போவதில்லை. இஸ்ரேலின் வீழ்ச்சி - மேற்கு உலகத்தின் வீழ்ச்சி - முக்கியமாக அமெரிக்காவின் வீழ்ச்சி. எனவே, இஸ்ரேலுடன் அனைவரும் கைகோத்து நிற்பர். ஏற்கனவே உக்ரைன் யுத்தத்தை தத்தெடுத்திருப்பது போன்று இஸ்ரேல் யுத்தத்தையும் அமெரிக்கா தத்தெடுத்துக் கொள்ளும்.

இவ்வாறானதொரு சூழலில் உலகின் கவனமானது இலங்கையின் மனித உரிமைகள் விவகாரத்திலிருந்து அதிகம் விலகிச் செல்வதற்கே வாய்ப்பு உண்டு. ஒப்பீட்டு அடிப்படையில் ஏற்கனவே, இலங்கையின் மீதான கவனம் குறைந்துதான் காணப்படுகின்றது. தற்போது மேலும் அது வீழ்ச்சியடைவதற்கான சூழலே அதிகமாக இருக்கிறது. இந்த நிலையில் இலங்கைமீது செல்வாக்கு செலுத்தக்கூடிய ஒரேயொரு சக்தியாக இந்தியாவே இருக்கப் போகின்றது. இந்தியாவை அணுகுவதன் மூலமே தமிழ் கட்சிகள் தற்போதுள்ள சூழலில் சாத்தியமாக விடயங்களை அடைய முயற்சிக்க வேண்டும்.

தென்னிலங்கையின் அரசியல் எதிர்காலமும் எவ்வாறு அமையப் போகின்றது - என்பது தொடர்பில் தெளிவான அனுமானங்களை செய்யக்கூடிய சூழல் இல்லை. அனைத்தும் குழப்பமான நிலையிலேயே இருக்கின்றது. இதற்கிடையில் தேர்தலை பிற்போடுவதற்கான வாய்ப்புகள் தொடர்பிலும் ஆராயப்படுவதாக செய்திகள் வெளிவருகின்றன. இந்த நிலையில் தமிழ் தேசிய கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? என்ன வேலைத் திட்டத்தை தங்கள் வசம் வைத்திருக்கின்றன? ஆகக் குறைந்த ஒருங்கிணைந்த செயல்பாடுகளை யாவது கொண்டிருக்கின்றனவா?

குத்துவிளக்கு சின்னத்திலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தப் போவதான யோசனையை வெளியிட்டிருந்தது. அனைத்து கட்சிகளும் ஒரு புள்ளியில் சந்திப்பதற்கும் - இணைந்து பணியாற்றுவதற்குமான ஒரு துருப்புச்சீட்டாக அதனைப் பயன்படுத்த முடியும் - ஏனெனில், ஒற்றுமையென்பது வலிந்து ஏற்படும் ஒன்றல்ல - அவ்வாறான முயற்சிகள் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. உண்மையில் ஒற்றுமை முயற்சிகள் மாற்றுத் தலைமைக்கான முயற்சிகள் அனைத்துமே மேலும் பிளவுகளுக்கே வழிகோலியிருக்கின்றன. இந்த நிலையில் ஒற்றுமையென்னும் பெயரில் உரையாடல்களை மேற்கொள்வது பயனற்றது - அதற்கு மாறாக, குறிப்பிட்ட ஒரு விடயத்தை அடிப்படையாகக் கொண்டு, அனைத்து தரப்புகளும் ஒரு புள்ளியில் சந்திப்பது எவ்வாறு என்றே சிந்திக்க வேண்டும். அது, ஒன்றே இணைந்து பணியாற்றுவதற்கான சூழலை கனியச் செய்யும்.

வெறும் சுலோகங்களில் சுகம் காணும் அரசியலை செய்வதிலிருந்து தமிழ்த் தேசிய தரப்புகள் வெளியில் வரவேண்டும். ஒரு புள்ளியில் சந்திப்பதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். அது ஒன்றே புதிய சவால்களை எதிர்கொள்வதற்கான ஒரே வழியாகும்.

# ஆசிரிய கலாசாலை நூற்றாண்டு விழா நல்லூரிலிருந்து நேற்று நடைபவனி!

## ஆதீன முதல்வர் தொடக்கி வைத்தார்



*யாழ்ப்பாணம், ஒக். 11*

*கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டை சிறப்பிக்கும் நடைபவனி நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6. 45 மணிக்கு நல்லூர் ஆலயத்தின் பின்புறத்தில் உள்ள நல்லை ஆதீனவாயிலில் ஆரம்பமாகியது.*

*ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரியர் சுவாமிகள் ஆசி வழங்கி நடைபவனியை தொடக்கி வைத்தார்.*

*முன்னாள் அதிபர்களான வே. கா. கணபதிப்பிள்ளை, வீ கருணலிங்கம் இருபாலை கற்பக பிள்ளையார் ஆலயம் பிரதம குரு சிவசிறீ பா. செல்வசேனக் குருக்கள் கலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளர் வ. சி. குணசீலன் எனப் பலர் நடைபவனியில் கலந்து கொண்டனர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மாணவ ஆசிரியர்களும் நடைபவனிக்கு ஆதரவு தெரிவித்து இணைந்து கொண்டனர்*


*கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நடைபவனியின்போது ஆசிரியர்கள் ஞானவிளக்குகள் என்பதனை சித்திரிக்கும் வகையில் மிகப்பெரிய விளக்கு ஒன்று வடிவமைக்கப்பட்டு எடுத்து செல்லப்பட்டது. (ஐ)*

# 12 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

*கொழும்பு, ஒக். 11*

*நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 12 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.*


*அதன்படி முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அநுராதபுரம், திருகோணமலை, பொலனறுவை,மாத்தளை, கண்டி, மட்டக்களப்பு, கேகாலை, நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய 12 மாவட்டங்களுக்கே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*



*அத்தோடு வடமத்திய, கிழக்கு, மற்றும் மத்திய மாகாணங்களிலும் பதுளை, கேகாலை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.*

*ஊவா, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சியை எதிர்பார்க்க முடியும். பலத்த மழை மற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 11 புதன்கிழமை
சோபகிருது வருடம் - புரட்டாதி 24
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : துவாதசி




**மேடம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர் பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும்.

**இடபம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். தாயாருக்கு மருத்துவ செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக்கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**கன்னி**
எதிர்காலம் பற்றிய மனகவலை வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக் கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறை வேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும்.

**விருட்சிகம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வாகன வசதி பெருகும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் வரவு கணிசமாக உயரும். பழைய சிக்கல்கள் தீரும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். ஈகோ பிரச்னை வந்து நீங்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும்.

**மீனம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள்.வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**ராஜீவ் காந்தி கொலை வழக்கு;**

# சாந்தனின் நாடு கடத்தல் வழக்கை விசாரிப்பதிலிருந்து நீதிபதி விலகல்

**சென்னை, ஒக். 11**

**இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சாந்தனின் நாடு கடத்தல் வழக்கை விசாரிப்பதில் இருந்து விலகுவதாக நீதிபதி சுந்தர் மோகன் அறிவித்துள்ளார்.**

வழக்கறிஞராக இருந்தபோது ராஜீவ் காந்தி கொலை வழக்கில் உச்சநீதிமன்றத்தில் ஆஜரானதால், தற்போது வழக்கை தான் விசாரிப்பது முறையாக இருக்காது என தெரிவித்துள்ளார்.

கடந்த 1991ஆம் ஆண்டு மே 21ஆம் திகதி முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 7 பேரும் கடந்த ஆண்டு நவம்பர் 11ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் வசிக்கும் தனது 75 வயதுடைய தாயார் கடுமையாக நோய் வாய்ப்பட்டிருப்பதால், தாம் உடனடியாக இலங்கை செல்ல விரும்புவதாக சாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு மனு வழங்கியுள்ளதாகவும், தனது பிரதிநிதித்துவங்கள் இன்னும் பரிசீலிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ)

**முதல்வர், அமைச்சர் குறித்து அவதூறு:**

# பொதுக்கூட்டம் போட்டு வருத்தம் தெரிவித்த கள்ளக்குறிச்சி மாவட்ட அ.தி.மு.க. செயலாளர்

சென்னை, ஒக். 11

அதிமுக பொதுக்கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி குறித்து அவதூறாக பேசிய கள்ளக்குறிச்சி மாவட்ட அதிமுக செயலாளர் குமரகுரு. நீதிமன்ற உத்தரவு காரணமாக அதே இடத்தில் நேற்று முன் தினம் பொதுக்கூட்டம் நடத்தி வருத்தம் தெரிவித்துக் கொண்டார்.

கள்ளக்குறிச்சி மந்தவெளி பகுதியில் கடந்த மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற அதிமுக பொதுக்கூட்டத்தில் கள்ளக்குறிச்சி அதிமுக மாவட்ட செயலாளர் குமரகுரு, முதல்வர் மற்றும் அமைச்சர் உதயநிதியை அவதூறாக பேசியதைக் கண்டித்து மாவட்டம் முழுவதும் காவல் நிலையங்களில் தி.மு.கவினரால் புகார் அளிக்கப்பட்டு, வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இதையடுத்து முன் பிணை பெற சென்னை உயர்நீதி மன்றத்தில் மாவட்ட செயலாளர் குமரகுரு மனு தாக்கல் செய்தார். மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், முறையாக அனுமதி பெற்று, மீண்டும் ஒரு பொதுக்கூட்டம் நடத்தி, அக்கூட்டத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது

நீதிமன்ற உத்தரவை செயல்படுத்தும் விதமாக, கள்ளக்குறிச்சி மந்தவெளியில், அதிமுக மதுரை மாநாடு தீர்மான விளக்க பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

இதில் பங்கேற்ற மாவட்ட செயலாளர் குமரகுரு, “முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி குறித்து நான் அவதூறாக பேசியதாக தெரிவிக்கப்படுகிறது. அந்தப் பேச்சு புண்படும்படி இருந்தால் வருத்தம் தெரிவிப்பதாக அப்போதே சமூக வலைதளங்கள் வாயிலாக நான் தெரிவித்திருந்தேன்.

இப்போதும் இந்தக் கூட்டத்தின் வாயிலாக, அவ்வாறு புண்படும்படி பேசி இருந்தால் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்” என்று கூறினார். அப்போது கூட்டத்தில் பங்கேற்ற அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மத்தியில் அமைதியான சூழல் காணப்பட்டது. (அ)

# மின் கட்டண உயர்வை திரும்பப் பெற வலியுறுத்தி தொழில் நிறுவனங்களில் கறுப்புக் கொடியேற்றம்

சென்னை, ஒக். 11

தொழில் நிறுவனங்களுக்கு உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை திரும்பப் பெறுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, நேற்று முன் தினம் மாநிலம் முழுவதும் நிறுவனங்களில் கருப்புக் கொடியேற்ற தமிழ்நாடு தொழில் துறை மின்நுகர்வோர் கூட்டமைப்பு சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது.

அதன்படி, கோவையில் கணபதி, ஆவாரம்பாளையம், இடையர்பாளையம் உட்பட மாவட்டம் முழுவதும் சுமார்



50 ஆயிரம் சிறு, குறு,நடுத்தர தொழில் நிறுவனங்களில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது. மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு தொழில் முனைவோர் கருப்புச் சட்டை அணிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர், ஆட்சியர் கிராந்திகுமார் பாடியிடம் மனு அளித்தனர். (அ)

# செந்தில் பாலாஜிக்கு உடல்நலக் குறைவு

சென்னை, ஒக். 11

அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதால், சென்னை ஸ்டான்லி அரசுமருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

சட்டவிரோத பண பரிமாற்ற தடுப்புச் சட்டத்தின்கீழ் அமைச்சர் செந்தில் பாலாஜி கடந்த ஜூன் 14ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அப்போது அவருக்கு திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டது. இதையடுத்து ஆழ்வார்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு இதய பைபாஸ் அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது. உடல்நிலை சீரான பிறகு, அவர் புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள செந்தில் பாலாஜிக்கு நேற்று முன் தினம் திடீரென உடல்நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து, அவரை சிறை மருத்துவர்கள் பரிசோதனை செய்தனர். தொடர்ந்து, மேல் சிகிச்சைக்காக அவரை பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு அவரது உடல்நிலையை மருத்துவர்கள் பரிசோதித்து சிகிச்சை அளித்தனர்.

பின்னர், அவரது உடல்நிலை சீரான பிறகு, பிற்பகலில் மீண்டும் பொலிஸ் பாதுகாப்புடன் புழல்சிறைக்கு அழைத்துச் சென்று சிறையில் அடைத்தனர். (அ)

# புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி திட்டம் வடக்கு மாகாணத்தில்!

## 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில்

யாழ்ப்பாணம், ஒக். 11

**தேசிய மின்சார அமைப்பிற்கு தினசரி 6.5 சதவீத புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்கும் திட்டம் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் வட மாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.**

**தேசிய மின்சார அமைப்புக்கு தினமும் 6.5சதவீத புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்கும் சூரிய சக்தி மின் அமைப்பு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக தனியார் நிறுவனம் ஒன்றினால் 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும் எனக் கூறப்படுகின்றது.**

இது குறித்து தனியார் சூரியப்படல நிறுவனம் ஒன்றின் தலைவர் ஜயந்த சமரகோன் கருத்துத் தெரிவிக்கையில்- வட மாகாணத்தில் பூநகரி ஏரியை அண்மித்த பகுதிகளில் 6000 ஏக்கர் நிலப்பரப்பில் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இதற்கமைவாக 1000 ஏக்கரில் 700 மெகாவோல்ட் சூரிய சக்தி மின் அமைப்பு நிறுவப்படவுள்ளதோடு, சூரிய சக்தி மின் அமைப்பு அமைக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் பூநகரி ஏரியை முழுமையாக அபிவிருத்தி செய்து அப்பிரதேசத்தில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யும் வகையில் விவசாயிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது-என்றார்.

இதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனம் 5 பில்லியன் ரூபா வினை செலவிடவுள்ளதாகவும், இத்திட்டத்தின் மூலம் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பில்லாத புதுப்பிக்கத்தக்க மின்சாரம் தேசிய மின்சார அமைப்பில் சேர்க்கப்படுவதால் அப்பகுதி விவசாயிகள் பயனடைவார்கள் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பான திட்ட மீளாய்வு கூட்டம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்றது. கலந்துரையாடலில் நீர்ப்பாசனம், காணி ஆணையாளர், மின்சார சபை, விவசாயம் ஆகிய திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பல அரச அதிகாரிகள் குறித்த மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

*2023 சிறுபோகப் பயிர்ச்செய்கை:*

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை!

கொழும்பு, ஒக். 11

சீரற்ற காலநிலையால் போதுமானளவு நீர் இல்லாமல் இவ்வாண்டு சிறுபோகத்தில் 58,770 ஏக்கர்கள் நெற்செய்கை மற்றும் வேறு பயிர்ச்செய்கைகளுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன், 53,965 விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் அவ்வாறு பாதிப்புக்குள்ளாகியுள்ள விவசாயிகளுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, அரசு எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிகள் நிலையிலும் தற்போது நடைமுறையிலுள்ள விவசாயக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீடுகளைச் செலுத்துவதற்குத் தேவையான நிதியை ஒதுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (அ)

# சீனாவுடன் மற்றுமோர் ஒப்பந்தத்துக்கு அனுமதி

கொழும்பு, ஒக். 11

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுக்கும் சீன மக்கள் குடியரசின் தேசிய அபிவிருத்தி மற்றும் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

உற்பத்தி திறன் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படுவதாக அரசு கூறுகிறது.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# அடுத்த வாரம் இலங்கைக்கு வருகிறது நாணய நிதியத்தின் மற்றுமொரு குழு!

கொழும்பு, ஒக். 11

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த கூட்டம் நேற்று இரண்டாவது நாளாக மொரோக்கோவின் மராகேஷில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் மற்றுமொரு குழு அடுத்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளது.

இந்த குழு இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் இரண்டாவது தவணை குறித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்தும் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் வரிக் கொள்கை மற்றும் பிற பொருளாதாரக் காரணிகள் குறித்து இந்த கலந்துரையாடலின்போது விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

# சர்வதேச அங்கீகாரம் பெற்ற மருத்துவ பட்டங்களை இலங்கையில் அங்கீகரிக்க அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஒக். 11

சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்களின் மருத்துவ பட்டப் படிப்புகளை இலங்கையில் அங்கீகரிப்பது தொடர்பான சட்டத்தை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் மருத்துவப் பட்டப் படிப்புகளை இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அடிப்படையான தரநிலைகள் மற்றும் அளவுகோல்களை உள்ளடக்கிய தேசிய கொள்கையை உருவாக்குவதற்கும் தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப மருத்துவ கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்துவதற்கு பொருத்தமான பரிந்துரைகளை வழங்குவதற்கும் முன்னதாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமரின் செயலாளர் தலைமையிலான குழுவை நியமிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதன்படி நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையின் அடிப்படையில், சர்வதேச தரவரிசையின் படி,1 முதல் 1000 வரையிலான வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் மருத்துவப் பட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட கூட்டுப் பிரேரணை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. (அ)

# 8 மாதங்களில் 22 பில்லியன் ரூபாய் இலாபம் ஈட்டியது விமானத்துறை!

கொழும்பு, ஒக். 11

நாட்டின் விமானத்துறை கடந்த ஜனவரி மாதம் முதல் ஒகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில், 22 பில்லியன் ரூபாயை இலாபமாக ஈட்டியுள்ளதாகவும், அதில் சுமார் 10 பில்லியன் ரூபா திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.



துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சரான நிமல் சிறிபால டி சில்வா, ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 200 விமானப் போக்குவரத்து சேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகள் காரணமாக விமான சேவைகள் பல சிரமங்களை எதிர்கொண்டிருந்தன. குறிப்பாக கொரோனாத் தொற்றுநோய் காரணமாக, விமானங்கள் நிறுத்தப்பட்டதுடன், சுற்றுலா பயணிகளின் வருகையும் குறைவாகவே காணப்பட்டது.

அதுமட்டுமல்லாது டொலர் நெருக்கடியால் முழு விமானப் போக்குவரத்துத் துறையும் பெரும் நெருக்கடியைச் சந்தித்தது. எவ்வாறாயினும், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நவீன தொழில்நுட்பத்துடன் அபிவிருத்தி செய்ததன் மூலமாக தென் கிழக்கு ஆசியாவின் சிறந்த விமான நிலையங்களில் ஒன்றாக இதனை, சர்வதேச விமானப் போக்குவரத்து அதிகார சபை பெயரிட்டுள்ளது.

பண்டாரநாயக்க விமான நிலையம் கடந்த ஒகஸ்ட் மாதம் 6 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான பயணிகளுக்கு சேவைகளை வழங்கியுள்ளது. விமான சேவைகளை வழங்குவதன் மூலம் இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் 22 பில்லியன் ரூபாய் இலாபத்தை ஈட்ட முடிந்துள்ளது-என்றார். (அ)

# வர்த்தகர் ஒருவரிடம் கப்பம் கோரிய சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஒக். 11

வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள திட்டமிட்ட குற்றச் செயலுடன் தொடர்புடைய குழுவொன்றின் தலைவரின் பெயரை குறிப்பிட்டு, வர்த்தகர் ஒருவரிடம் கப்பம் கோரிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, கட்டுநாயக்க பகுதியில் நேற்று முன் தினம் இரவு குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர், மாத்தறை - திஹகொட பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் என குறிப்பிடப்படுகின்றது.

அவர் கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் அறையொன்றில் தற்காலிகமாக தங்கியிருந்துள்ளதாக முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து கைபேசி மற்றும் அதிகளவான சிம் அட்டைகளும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 11 பேர் கைது!

திருமலை, ஒக். 11

திருகோணமலையில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது போதைப் பொருட்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கு அமைய குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களை திருகோணமலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# படை முகாமிலிருந்து மாயமான துப்பாக்கி பாதாள உலகக்குழுவினருக்கு வாடகைக்கு?

## விசாரணைகளை ஆரம்பித்தனர் பொலிஸார்

கொழும்பு, ஒக். 11

**இராஜாங்க அமைச்சர் டி. சானக்கவின் மாமனார் உட்பட தென் மாகாணத்தில் இடம் பெற்ற பல கொலைகள் கரந்தெனிய இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியத்தில் இருந்து எடுக்கப்பட்ட ரி-56 துப்பாக்கியைக் கொண்டு பாதாள உலகக் குழுக்களால் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.**

கரந்தெனிய இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியத்தில் இருந்த ரி-56 துப்பாக்கி மற்றும் பல மகசீன்கள் காணாமல் போயுள்ளதுடன், இது தொடர்பில் கரந்தெனிய பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த ஆயுதக் களஞ்சியத்தின் பாதுகாவலரை இராணுவ பொலிஸார் கைது செய்துள்ளதுடன், சந்தேக நபர் எதிர்வரும் நாட்களில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளார்.

கரந்தெனிய ஆயுதக் களஞ்சியசாலைக்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த சில ரி-56 மகசீன்கள் இராணுவப் பொலிஸாரால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆயுதக் களஞ்சியத்தில் இருந்து காணாமல் போன ரி-56 துப்பாக்கி, தென் மாகாணத்தில் இடம்பெற்ற பல கொலைகளுக்காக, பாதாள உலகக் குழுவினருக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தென் மாகாணத்தில் இடம் பெற்ற இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்கவின் மாமனார் உள்ளிட்ட பல கொலைகளுக்கு பாதாள உலகக் கும்பல்களால் ரி-56 துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக, பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளதுடன், காணாமல் போன ஆயுதத்தை கண்டுபிடிக்கும் நடவடிக்கையும் தொடங்கப்பட்டுள்ளது. (அ)

# ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் இன்றுடன் மேலதிக வகுப்பு தடை

கொழும்பு, ஒக். 11

ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சைகான மேலதிக வகுப்புகளை இன்று நள்ளிரவின் பின்னர் நடத்தவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பரீட்சை நிலையங்களாக செயற்படவுள்ள பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை மேற்கொள்ளுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் இரண்டாயிரத்து 888 பரீட்சை மத்திய நிலையங்களில் எதிர்வரும் 15 ஆம் திகதி தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 13ஆவது திருத்த காணி ஆணைக்குழு சட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 11

தேசிய காணி ஆணைக்குழு சட்டத்தை தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் 9ஆவது அட்டவணையின் பட்டியல் 1 இன் சரத்து 2 இன் படி காணி ஆணைக்குழு நிறுவப்பட வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதன்படி, அந்த நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட பூர்வாங்க வரைவின் அடிப்படையில் சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பொலிஸ் அதிகாரி சுட்டுக்கொலை!

கொழும்பு, ஒக். 11

பாதாள உலகக் குற்றவாளிகளான கரந்தெனியே சுத்தா மற்றும் பொடி லஸ்ஸி ஆகிய இருவரை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட முன்னாள் பொலிஸ் பரிசோதகர் பாலேந் திரசிஹா நேற்று முன் தினம் இரவு ரத்கமவில் உள்ள அவரது வீட்டிற்கு முன்பாக ரி-56 துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

சம்பவம் நடந்தபோது, அவர் பொலிஸ் கடமையில் இருக்கவில்லை. பணி இடைநிறுத்தப்பட்டிருந்தார்.

அவரது சகோதரரும் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது சகோதரனுடன் பேசிக் கொண்டிருந்தபோது துப்பாக்கியால் சுடப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

மற்றொருவர் மீது தாக்குதல் நடத்தியதாக இந்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும், அவருக்கு எதிராக சாட்சியமளிக்கவிருந்த சாட்சியை அச்சுறுத்திய குற்றச்சாட்டின் பேரில் அவர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த குற்றத்திற்காக அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அண்மையில் பிணையில் வெளிவந்தார். (அ)

# வவுனியா வெளிக்குளம் விபத்தில் 2 விசேட அதிரடிப்படையினர் பலி!







வவுனியா, ஒக். 11

வவுனியா, வெளிக்குளம் பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் மேலும் ஆறு படையினர் காயமடைந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

மழையின்போது வீதியில் நின்றிருந்த மாடுகள் மீது பொலிஸ் விசேட அதிரடிப்படை ஜீப் மோதி வீதியை ஒட்டியுள்ள சுவரில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

வவுனியா, மடுகந்தவில் அமைந்துள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமில் கடமையாற்றும் இருவரே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

காயமடைந்த ஏனைய ஆறு அதிரடிப்படையினர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# விமான சுழற்சி கட்டண விதிமுறையை திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக். 11

2023 ஆம் ஆண்டின் விமானச் சுழற்சி வசதிக் கட்டண விதிமுறைகளைத் திருத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு விமான தகவல் வலயத்தின் ஊடாக பறக்கும் விமானங்களுக்கு விமான போக்குவரத்து கட்டணத்தை விதிக்கும் வகையில் 1981 ஆம் ஆண்டு விமான போக்குவரத்து வசதிகள் ஒழுங்குமுறைகள் இயற்றப் பட்டன.

குறித்த விதிமுறைகள் கடந்த காலத்தில் திருத்தப்படவில்லை என அரசாங்கம் கூறுகிறது.

எனவே, சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் கொள்கைகள் மற்றும் தற்போதைய உலகளாவிய போக்குகளைக் கருத்தில் கொண்டு, விமான போக்குவரத்து வசதிகள் விதிமுறைகள் திருத்தப்பட்டு, விமானப் போக்குவரத்து வசதிகள் விதிமுறைகள் 2023 எண் 1 என வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சர்கள் சபை ஒப்புதல் அளித்துள்ளது. (அ)

# நஸீர் அஹமட்டின் ஆசனம் வெற்றிடம்

கொழும்பு, ஒக். 11

முன்னாள் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டின் ஆசனம் வெற்றிடமாகியுள்ளதாக பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர் குஷானி ரோஹணதீர தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

இதனால் வெற்றிடத்திற்கு முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்டப் பட்டியலில் அடுத்த வேட்பாளர் தேர்தல் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட உள்ளார்.

நஸீர் அஹமட்டுக்குப் பிறகு இந்தப் பட்டியலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா இடம் பெற்றுள்ளார்.

அதன்படி புதிய பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு இன்று வெளியிடப்படவுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் உறுப்புரிமையிலிருந்து நசீர் அஹமட் நீக்கப்பட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பு சரியானது என கடந்த 6ஆம் திகதி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இஸ்ரேலில் இலங்கையர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்

## ஜனாதிபதி ரணில் உறுதியளிப்பு

கொழும்பு, ஒக். 11

பலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே தொடர்ச்சியாக போர் இடம்பெற்று வரும் நிலையில், இஸ்ரேலில் பணியாற்றும் இலங்கையர்கள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுத்து அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் - பலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதல் உக்கிரமடைந்துள்ள நிலையில், ஜனாதிபதி ஊடக மையத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், இஸ்ரேலில் பணியாற்றும் இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வெளிவிவகார அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையில் வாழும் இஸ்ரேலியர்கள் மற்றும் இஸ்ரேல் நாட்டை சேர்ந்த சுற்றுலாப் பயணிகளை பாதுகாப்பாக இஸ்ரேலுக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில், இலங்கையில் உள்ள இஸ்ரேலியர்கள் குறித்து தேடிப் பார்க்குமாறு பொலிஸ் திணைக்களத்துக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் எனும் இரு நாட்டுக் கொள்கையை இலங்கை எப்போதும் ஆதரிக்கும் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, இருநாடுகளுக்கிடையே முன்னெப்போதும் இல்லாத இந்தத் தாக்குதலை இலங்கை அரசாங்கம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார். (அ)

# அடுத்த தேர்தலிலும் பெரமுனவே வெல்லும்

## மொட்டு கட்சி எம்.பி. உறுதி



கொழும்பு, ஒக். 11

**“இந்நாட்டில் சோறு சாப்பிடும் மக்கள்தான் வாழ்கின்றனர், எனவே, அடுத்த தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியே வெற்றி பெறும். தேர்தலை பிற்போட அரசு முயற்சிக்க வில்லை.” - என்று மொட்டு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

தேர்தலை பிற்போடும் எண்ணம் அரசுக்கு இல்லை. காரணத்தின் அடிப்படையிலேயே உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் பிற்போடப்பட்டது.

அடுத்த தேர்தலிலும் நாம் தான் வெற்றி பெற்று ஆட்சியை பிடிப்போம் என உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன்.

நாட்டில் புல் சாப்பிடுபவர்கள் அல்லர், சோறு சாப்பிடும் மக்கள்தான் உள்ளனர், எதிரணிகளின் அரசியல் நாடகம் மக்களுக்கு தெளிவாக புரியும். கிராம மட்டத்தில் தற்போது கூட்டங்களை நடத்திவருகின்றோம். எமது பலம் என்னவென்பதை ஜே.வி.பியினருக்கு அங்கு வந்து பார்க்கலாம்.-என்றார்.

(அ)

# சீன கப்பல் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி!

## வெளிவிவகார அமைச்சர்



கொழும்பு, ஒக். 11

“ஷி யான் 6” எனும் சீனக் கப்பல் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

குறித்த கப்பல் எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இதன்படி, “ஷி யான் 6” சீனக் கப்பல் கடந்த ஒக்ரோபர் மாதம் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி கோரப்பட்டபோதும், நவம்பர் மாதத்தில் வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள தாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

‘சீனா மிகவும் முக்கியமான நாடு. சீனாவுடன் பல மிக மிகவும் முக்கியமான உறவுகள் உள்ளன. அதேநேரம் எமது நாட்டில் மேற்கொள்ள வேண்டிய விடயங்களும் காணப்படுகின்றன. அத்துடன், இது மிகவும் எளிமையான பயணம் அல்ல. குறித்த காலப்பகுதியில் இதனை எதிர்கொள்வதற்கு முழுமையாக தயார் நிலையில் இருக்க வேண்டும். உள்ளக நடைமுறைகளுக்கமைய திகதியினை வழங்கியுள்ளோம்-என்றார்.

(அ)

# பொரளை லேடி ரிஜ்வே வைத்தியசாலையின் சீ.ரி. ஸ்கான் சேவை முற்றாக தடைப்பட்டது!

கொழும்பு, ஒக். 11

பொரளை லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சீ.ரி. ஸ்கான் சேவை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள ஒரேயொரு சீ.ரி. ஸ்கான் இயந்திரமும் பழுதடைந்ததன் காரணமாக குறித்த சேவைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக, அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வருடாந்த சேவை ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படாமையால், குறித்த இயந்திரத்தை சீர்செய்வதில் பாரிய பிரச்னை காணப்படுவதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

பொரளை லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை சிறுவர்களுக்கான சிறப்பு மருத்துவமனையாக காணப்படுகின்றது.

இலங்கையில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து குறித்த வைத்தியசாலைக்கு பல சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் சிகிச்சைகளுக்காக மாற்றப்படுகின்றனர்.

சி.ரி.ஸ்கான் இயந்திரம் பழுதடைந்துள்ளதால், தற்போது சிகிச்சையளிப்பதற்கு பாரிய அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, இதற்கான உரிய தீர்வு விரைவில் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# சட்டவிரோதமாக பீடி இலை கடத்த முயன்ற ஒருவர் கைது

கொழும்பு, ஒக். 11

புத்தளம் - மதுரங்குளியில் சட்டவிரோதமான முறையில் பீடி இலைகளை கடத்த முயன்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கற்பிட்டி - மாம்புரி பிரதேசத்தில் இருந்து குளியாபிட்டிக்கு லொறி மூலம் சட்டவிரோதமாக பீடி இலைகளை கடத்த முற்பட்ட ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை மதுரங்குளி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த லொறி பொலிஸாரால் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது 78 மூடைகளில் சூட்சுமமாக மறைத்து, கடத்த திட்டமிட்டிருந்த சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய குருணாகல் - அலவ்வ பகுதியைச் சேர்ந்த 34 வயதான ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இயந்திரப் படகு மூலம் பீடி இலைகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மதுரங்குளி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# டிப்பர் ரக வாகனம் மோதி பொலிஸ் அலுவலர் மரணம்!

கொழும்பு, ஒக். 11

கொழும்பு - குருநாகல் வீதியின் புஹூரிய சந்தியில் டிப்பர் ரக வாகனம் மோதுண்டதில் கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாகனங்களை நிறுத்தி நேற்று முன்தினம் இரவு சோதனையில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, கந்தளாயில் இருந்து கடுவளை நோக்கி மணல் ஏற்றிச்சென்ற பாரவூர்தி ஒன்று பொலிஸ் உத்தியோகத்தர் மீது மோதியது.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

இந்தநிலையில், பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டார்.

அண்மையில் கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் கார் ஒன்று மோதியதில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# திருடர்களின் பிடியில் சிக்கியுள்ள திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகம்

கொழும்பு, ஒக். 11

திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகம் தற்போது திருடர்களின் பிடியில் சிக்கியுள்ளதாக படகு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் கடற்தொழில் அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களின் போது அறிவித்த நிலையில், இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என குற்றம்சாட்டப்படுகிறது.

திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகம் நாட்டில் பரபரப்பாக இயங்குமொரு மீன்பிடித் துறைமுகமாகும்.

தினசரி நூற்றுக்கணக்கான கப்பல்கள் சேவை பெற்றுவரும் இந்த மீன்பிடி துறைமுகத்தில் பாதுகாப்பு பிரச்னை காரணமாக மீனவர்கள் மற்றும் வியாபாரிகள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகத்திற்கு பழுதுபார்ப்பதற்காக கொண்டு வரப்பட்ட படகுகளில் இருந்து எரிபொருள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் திருடப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

மீன்பிடித் துறைமுகத்தில் தற்போதுள்ள மின்விளக்குக் கம்ப அமைப்பும் முறையாகச் செயற்படாததன் காரணமாக இவ்வாறு திருட்டுகள் இடம்பெறுவதற்கு சாதகமானதொரு சூழல் காணப்படுவதாகவும் படகு உரிமையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(அ)

# மான் கறி தயாரித்த 17 வயது சிறுமி பொலிஸாரால் கைது

கொழும்பு, ஒக். 11

விலானகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் அலவத்துகொட பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மான் கறி தயாரித்துக்கொண்டிருந்த 17 வயதுடைய சிறுமி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விலானகம பிரதேசத்தில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் மான் ஒன்று கொல்லப்பட்டுள்ளதாகவும், குறித்த வீட்டில் மான் கறி மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் வழங்கிய இரகசிய தகவலின் பேரில் பொலிஸார் இந்த சோதனையை மேற்கொண்டனர்.

குறித்த நபர் கண்டி நீதிவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு 20ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

பின்னர், நீதிவான் நீதிமன்றத்தில் மான் கறியை அழிக்க உத்தரவிடப்பட்டது.

(அ)

# காலி, மாத்தறை மாவட்டங்களில் பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஒக். 11

காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளில் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன்படி, குறித்த பாடசாலைகள் இன்று ஆரம்பிக்கப்படுமென தென் மாகாண கல்விச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சீரற்ற வானிலை காரணமாக மாத்தறை மாவட்ட பாடசாலைகள் கடந்த 5 ஆம் திகதி முதல் மூடப்பட்டன.

அத்துடன், காலி மாவட்ட பாடசாலைகள் நேற்று முன்தினமும் நேற்றும் மூடப்பட்டன.

தென் மாகாணத்தில் மழை குறைவடைந்துள்ள நிலையில், பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(அ)

குரங்குபாய்ஞ்சான் விவகாரம்

# இன உறவை சீர்குலைக்க முயற்சிக்கவேண்டாம்!

**இம்ரான் எம்.பி. கோரிக்கை**

திருமலை, ஒக். 11

**முழுமையாக முஸ்லிம்கள் வாழும் கிண்ணியா குரங்குபாஞ்சான் கிராமத்துக்கு பௌத்த பிக்குகள் விஜயம் செய்து, அங்குள்ள பழைய இராணுவ முகாம் காணியை பார்வையிட்டுச் சென்றுள்ளமை பொதுமக்களிடையே பீதியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இன உறவை சீர்குலைக்க முயற்சிக்க வேண்டாம் என சம்பந்தப்பட்டோரை நான் கேட்டுக் கொள்கிறேன் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

கிண்ணியா பிசரதேச செயலகப் பிரிவின் மஜீத் நகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் குரங்குபாஞ்சான் கிராமம் உள்ளது. இது ஒரு விவசாயக் கிராமமாகும். விடுதலைப்புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை காலப்பகுதியில் சர்வதேசம் வரை இக்கிராமம் பற்றி பேசப்பட்டுள்ளது. இங்கு முழுமையாக முஸ்லிம்களே வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு இராணுவ முகாமொன்று இருந்து தற்போது இராணுவத்தினர் அகன்று சென்றுள்ளனர். இந்நிலையில், இராணுவ முகாம் அமைந்திருந்த இக்காணியை பௌத்த பிக்கு ஒருவர் தலைமையிலான குழுவினர் அண்மையில் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இது அங்கு வாழும் மக்களிடையே சந்தேகத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. பல்லாண்டு காலம் சமூகமாக மக்கள் வாழ்ந்து வரும் பகுதியில் இவ்வாறு செயற்படுவது இன உறவைச் சீர்குலைக்கும் முயற்சியாக அமைந்து விடும்.

எனவே, அதிகாரிகள் என்ற வகையில் கிண்ணியா பிரதேச செயலாளரும், திருகோணமலை அரசாங்க அதிபரும் இது விடயத்தில் உடன் கவனம் செலுத்த வேண்டும். அதேபோல கிண்ணியா பிரதேச ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர் ஏ.எல். அதாவுல்லா எம்.பியும், ஆளுங்கட்சி என்ற வகையில் கிண்ணியாவுக்கான ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளரும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி உயர்மட்டத்தின் கவனத்துக்கு இதனைக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்விடயத்தில் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க நான் தயாராக இருக்கின்றேன்-என்று கூறியுள்ளார்.



# பயனாளிகளுக்கு வீடுகள் கையளிப்பு

அம்பாறை,ஒக். 11

உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 6 இலட்சம் பெறுமதியான மானிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அம்பாறை மாவட்ட முகாமையாளர், விசேட அதிதிகளாக சாய்ந்தமருது பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபை பொறியியலாளர், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாக கிராம உத்தியோகத்தர், வீடமைப்பு உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# உணவுப் பற்றாக்குறையினை நிவர்த்திக்க விதை நெல், உரம்



திருமலை, ஒக். 11

உணவுப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் காப்போம் தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்த விதை நெல் மற்றும் உரம் போன்றவற்றை வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் திருமலை புனித சென் ஜோசப் முதியோர் இல்லத்தில் இடம்பெற்றது.

காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பிரதீப்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நிலாவெளி கோபாலபுரம் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.நிரஞ்சன் கலந்துகொண்டு புனித சென் ஜோசப் முதியோர் இல்ல வயல் காணிக்கான விதை நெல் மற்றும் உரம் போன்றவற்றை அதன் பொறுப்பாளர் அருட் சகோதரி லூஸினாவிடம்வழங்கினார்.

இந்நிகழ்வில் காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர்,

செயலாளர், பொருளாளர், புனித சென் ஜோசப் முதியோர் இல்லத்தின் நிருவாகத்தினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (அ)

# மரங்களை வெட்டி அகற்ற பொதுமக்கள் கோரிக்கை

திருமலை, ஒக். 11

பாலமுனை பிரதான வீதி அருகில் உள்ள இரு பெரும் மரங்களை வெட்டி அப்புறப்படுத்துமாறு பல முறை கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் இடம்பெறாமல் இருப்பது தமக்கு மிகுந்த கவலையளிக்கின்றது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய காரியாலயத்திற்கு கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக பல முறை இவ்விடயம் தொடர்பில் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இம்மரங்கள் இதுவரை வெட்டப்பட்டு அப்புறப்படுத்தப்பட வில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளின் பிரதான வீதிகளில் இருந்த பெரு மரங்கள் வீழ்ந்து உயிர்ப்பலி



உள்ளிட்ட பல்வேறான சேதங்கள் இடம்பெற்று வரும் இக்காலப் பகுதியில், கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக பாலமுனை பிரதான வீதியின் அருகில் விசாலமாய் வளர்ந்து தற்போது இலைகள் கொட்டப்பட்டு இறக்கும் நிலையில காட்சி தரும் இப்பெரு மரங்களின் வேர்கள் வியாபித்து வளர்ந்துள்ளதனால் இதற்கு அருகில் உள்ள கட்டடங்கள் சிலவற்றின் பாகங்களுக்கு சேதம் ஏற்பட்டு வருவதாகவும் அதன் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சீரற்ற காலநிலை காரணமாக பாலமுனையினை அண்டிய ஒலுவில் பிரதேசத்தில் மின்னல் தாக்கத்தின் மூலம் ஒருவர் மரணித்ததுடன் மூவர் பாதித்துள்ள நிலையில் இப்பகுதியில் மாலை வேளையில் பலத்த காற்று வீசி வருவதனால் குறித்த இப்பெரு மரங்களை வெட்டி அகற்றி மக்கள் நலனில் அக்கறை கொள்ளுமாறு பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட தாப்பினருக்கு கோரிக்கை விடுக்கின்றனர். (அ)

# சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து அதிபர்களுக்கு விழிப்புணர்வு

அம்பாறை, ஒக். 11

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மற்றும் டயகோனியா அமைப்புக்களின் ஆதரவுடன் முதல் கட்டமாக கல்முனைக் கல்வி வலயத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட இருபது பாடசாலைகளின் அதிபர்களுக்கு சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வளவாளராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் ஏ.சீ.ஏ.அஸீஸ் கலந்து கொண்டு பல ஆக்கபூர்வமான விடயங்களை முன்வைத்தது மட்டுமன்றி, பாடசாலைச் சூழலில் அதிபர்கள் தினமும் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக அதிபர்களால் முன்வைக்கப்பட்ட வினாக்களுக்கு பயனுள்ள விளக்கங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இஸ்ரேல் தாக்குதல் தொடர்ந்தால் பணயக் கைதிகளை கொல்வோம்

## ஹமாஸ் அமைப்பு கடும் எச்சரிக்கை

ஜெருசலேம், ஒக். 11

**பலஸ்தீன மக்கள் வசிக்கும் பகுதிகளில் முன்னறிவிப்பின்றி நடத்தப்படும் ஒவ்வொரு தாக்குதலின்போதும் ஒரு இஸ்ரேலிய பணயக்கைதி கொல்லப்படுவார் என ஹமாஸ் அறிவித்துள்ளது.**

**இஸ்ரேல் மீதான சமீபத்திய தாக்குதலுக்குப் பின்னர் ஹமாஸ் உறுப்பினர்கள் அங்கிருந்து தப்பிச் செல்லும் போது இஸ்ரேலியர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து சென்றுள்ளனர்.**



இவ்வாறு பணய கைதிகளாக கொண்டு செல்லப்பட்ட மக்கள் கொல்லப்படுவார்கள் என ஹமாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை எவ்வித முன்னறிவிப்புகளும் இன்று இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய பாரிய தாக்குதலில் 1500 ற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ள அதேநேரம் சுமார் 3,000 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, ஹமாஸுக்கு எதிராகப் போரிடுவதற்காக இஸ்ரேல் இராணுவத்திலிருந்து வெளியேறிய சுமார் 300,000 பேர் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் மொஸ்கோவுக்கு விஜயம் செய்வதற்கான முயற்சிகளை பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், மேற்கொண்டு வருவதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

# இஸ்ரேலுக்கு ஆஸி. ஆதரவு



கான்பரா, ஒக். 11

இஸ்ரேல் மீது பலஸ்தீனத்தின் ஹமாஸ் போராளிகள் குழு நடத்திய தாக்குதலை அவுஸ்திரேலிய அரசாங்கம் வன்மையாக கண்டித்துள்ளது.

தமது கண்டனத்தை அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பனீஸ் எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

“நட்பு நாடான இஸ்ரேல் பக்கம் அவுஸ்திரேலியா நிற்கின்றது.

இஸ்ரேல், அதன் நகரங்கள் மற்றும் பொதுமக்கள் மீது ஹமாஸ் நடத்திய கண்மூடித்தனமான மற்றும் வெறுக்கத்தக்க தாக்குதல்களை கண்டிக்கிறோம்.

இஸ்ரேலின் தற்காப்பு உரிமையை நாங்கள் அங்கீகரிக்கிறோம்” என்று பிரதமர் அந்தோணி அல்பனீஸ் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஹமாஸ் நடத்திய தாக்குதலுடன் எமக்கு எந்த தொடர்பும் இல்லை

## ஈரான் அரசு கூறுகிறது

தெஹ்ரான், ஒக். 11

இஸ்ரேலுக்குள் ஹமாஸ் நடத்திய முன்னெப்போதும் இல்லாத தாக்குதல்களில் தமக்கு எந்த தொடர்பும் இல்லை என ஈரான் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக தொடர்ந்தும் இருப்போம் என்றும் ஐக்கிய நாடுகளுக்கான ஈரானின் பணியகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.



ஏழு தசாப்தகால அடக்குமுறை மற்றும் கொடூரமான குற்றங்களுக்கு எதிரான பாலஸ்தீனத்தால் எடுக்கப்பட்ட உறுதியான நடவடிக்கையே இதுவென்றும் அறிவித்துள்ளது. (அ)



# ஒவ்வொரு யுத்தமும் பெரும் தோல்விதான்!

## போரை உடனடியாக நிறுத்தவேண்டும் என்கிறார் பாப்பரசர் பிரான்சிஸ்

வத்திக்கான் சிற்றி, ஒக். 11

போர் ஒரு தோல்வி. ஒவ்வொரு போரும் தோல்விதான். எனவே போரை உடனடியாக நிறுத்தும்படி இருதரப்பையும் வேண்டுகிறேன் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளனர்.

வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் சிறப்பு பிரார்த்தனைக்கு பிறகு பொதுமக்கள் மத்தியில் பேசிய பாப்பரசர் பிரான்சிஸ், இஸ்ரேல் - ஹமாஸ் போர் குறித்து வேதனை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் பேசுகையில்-

இஸ்ரேலில் தற்போது நடப்பது அச்சமும், வேதனையும் அளிக்கிறது. பயங்கரவாதமும், போரும் தீர்வுகளை கொண்டுவருவதில்லை, மரணத்தை மட்டுமே கொண்டு வருகின்றன.

போர் ஒரு தோல்வி. ஒவ்வொரு போரும் தோல்விதான். எனவே போரை உடனடியாக நிறுத்தும்படி இருதரப்பையும் வேண்டுகிறேன்-என்றார்.

இதனிடையே இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையே பதற்றம் அதிகரித்து வருவது குறித்து கவலை தெரிவித்துள்ள சீனா, நிலைமை மேலும் மோசமடைவதை தவிர்க்கவும், பொதுமக்களைப் பாதுகாக்கவும் அமைதி காக்கும்படி இருதரப்பையும் வலியுறுத்தியுள்ளது. (அ)

# காசா எல்லைப்பகுதி இஸ்ரேல் இராணுவ கட்டுப்பாட்டுக்குள்!

## போரை நிறுத்துமாறு பல நாடுகளிடமிருந்தும் எச்சரிக்கை

ஜெருசலேம். ஒக். 11

காசா எல்லையை தனது கட்டுப்பாட்டுக்குள் இஸ்ரேல் இராணுவம் கொண்டு வந்துள்ளது.

ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் 500 தடவைக்கு மேல் நேற்று முன் தினம் இரவு குண்டுத்தாக்குதல் நடத்தியுள்ளது.

காசா எல்லையை முற்றிலுமாக இஸ்ரேல் முடக்கியுள்ளதுடன், உணவு, எரிபொருள் விநியோகம் ஆகிய அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் நேற்று முன் தினம் இரத்து செய்யப்பட்டது.

இஸ்ரேலில் வெளிநாட்டவர்கள் 900 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஹமாஸ் போராளிகளுக்கும் இஸ்ரேலியப் படைகளுக்கும் இடையே பணயக்கைதிகள் மோதலுக்குப் பிறகு பீரியில் கண்டெடுக்கப்பட்ட 100 இற்கும் மேற்பட்ட உடல்களும் இதில் அடங்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பலஸ்தீனியக் குழுவான ஹமாஸ் இஸ்ரேல் மீது நடத்திய திடீர்த் தாக்குதலின்போது ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், காயமடைந்துள்ளதுடன் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலின் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு வெளியிட்ட வீடியோவில்,



ஹமாஸை “காட்டுமிராண்டிகள்” என்று அழைத்துள்ளார்.

மற்றும் பலஸ்தீனிய ஆயுதக் குழுவுக்கு எதிரான “இந்தப் போரில் தனது நாடு வெற்றி பெறும்” என்று அவர் கூறினார்.

ஹமாஸ் வரலாற்று விகிதாசாரத்தில் ஒரு தவறை செய்துள்ளது. குடும்பங்களை அவர்களது வீடுகளில் படுகொலை செய்தல், வெளிப்புற திருவிழாவில் நூற்றுக்கணக்கான இளைஞர்களை படுகொலை செய்தல், ஏராளமான பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள், ஹோலோகாஸ்டில் இருந்து தப்பியவர்களைக் கூட கடத்தியது”, இதற்கு நாம் கடுமையாக கண்டனங்களை தெரிவிக்கின்றோம் என பென்ஜமின் நெதன்யாகு கூறினார்.

ஹமாஸ் மீது இஸ்ரேல் சரியான விலையை நிர்ணயிக்கும். அது அவர்களாலும் இஸ்ரேலின் மற்ற எதிரிகளாலும் பல தசாப்தங்களுக்கு நினைவில் இருக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

அமெரிக்காவின் உயர்மட்ட ஜெனரல் ஈரானுக்கு இஸ்ரேல்-ஹமாஸ் போரில் ஈடுபட வேண்டாம் என்று எச்சரித்துள்ளார்.

மேலும் மோதலை விரிவாக்க விரும்பவில்லை என்று அவர் கூறினார்.

ஜெனரல் சார்லஸ் கியூ பிரவுன், கூட்டுப் படைகளின் தலைவர், ஈரானுக்கான அவரது செய்தி என்ன என்று கேட்டபோது, போரில் ஈடுபட வேண்டாம் என்று கூறினார்.

இஸ்ரேலுக்கு அருகில் ஒரு விமானம் தாங்கி கப்பலை அமெரிக்கா நிலைநிறுத்துவது, நாட்டிற்கு வலிமையான ஆதரவின் நோக்கம் என்று அவர் கூறினார். (அ)

2024 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்

# சில அமைச்சுக்களின் ஒதுக்கீட்டை தோற்கடிப்பதற்கு எதிரணி வியூகம்!

**கொழும்பு, ஒக். 11**

**வரவு-செலவுத் திட்டத்தின் சில அமைச்சுகள்மீதான நிதி ஒதுக்கீட்டை தோற்கடிப்பதற்கான முயற்சியில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஈடுபடும் என தெரியவருகின்றது.**

**2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டு சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.**

இந்நிலையில் 2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதீட்டை முன்வைத்து உரையாற்றவுள்ளார்.

அதன்பின்னர் நவம்பர் 14 ஆம் திகதி 2ஆவம் வாசிப்புமீதான விவாதம் ஆரம்பமாகும். 2ஆம் வாசிப்புமீதான வாக்கெடுப்பு நவம்பர் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

3ஆம் வாசிப்புமீதான விவாதம் நவம்பர் 22 ஆம் திகதி ஆரம்பமாகும். டிசெம்பர் 13 ஆம் திகதி பாதீடு மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும்.

பாதீட்டு விவாதத்தில் அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பில் தனித்தனியாக விவாதம் நடத்தப்படும்.

இதன்போது மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பை எதிர் கொண்டுள்ள அமைச்சுகளுக்கான ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் எதிரணி வாக்கெடுப்பைக் கோரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்சக்தி அமைச்சு, விவசாய அமைச்சு, சுகாதார அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு உட்பட மேலும் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டை தோற்கடிக்க முயற்சி எடுக்கப்படுகின்றது.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டை நிறைவேற்றிக் கொள்வதற்கு சாதாரண பெரும்பான்மை (113) போதும் என்ற நிலையில், அதற்கான பலம் அரச தரப்பில் உள்ள நிலையில், இப்படியானதொரு முயற்சியில் ஈடுபடுவது ஏற்புடைய நடவடிக்கையா என்ற கேள்வியும் எதிரணி தரப்பில் எழுந்துள்ளது.

ஆனால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியை வெளிப்படுத்த இதுவும் ஒரு நகர்வாக இருக்கும் என சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, பாதீட்டு விவாத காலப்பகுதியில் ஆளுங்கட்சியினரை கொழும்பிலேயே இருப்பதற்கான ஆலோசனை ஆளுந்தரப்பில் இருந்து விடுக்கப்படவுள்ளது. (அ)

# அடுத்த தேர்தலில் சிறுபான்மை கட்சிகளே தீர்மானிக்கும் சக்தி!

பழனி திகாம்பரம் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 11

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவே வெற்றிபெறுவார், அவருக்கே தமது அணி ஆதரவு வழங்கும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஹற்றன் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

" இந்த அரசுமீது மக்கள் அதிருப்தியில் உள்ளனர். புதிய, புதிய சட்டங்களை கொண்டு வந்து மக்களை ஒடுக்குவதற்கு ஆளுந்தரப்பு முற்படுகின்றது. எனவே, அடுத்த தேர்தலில் ஆளுங்கட்சி தோல்வி உடைவது உறுதி.

நாம் சஜித்தை ஆதரிப்போம். மலையக பெருந்தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவேன் என அவர் உறுதியளிப்பார். அடுத்த தேர்தலில் சஜித் வெற்றிபெற்ற பின்னர் இதனை நாம் நிச்சயம் செய்வோம். மக்களே அச்சப்படவேண்டாம், அடுத்து வருவது எமது ஆட்சியாகவே இருக்கும்.

சிறுபான்மையினக் கட்சிகள் ஆதரிக்கும் வேட்பாளரே வெற்றிபெறுவார். சிங்கள வாக்குகள் பலகூறுகளாக பிரியும். எனவே, சிறுபான்மையின மக்களின் வாக்குகள்தான் தீர்மானிக்கும் சக்தியாக அமையும்." - என்றும் திகாம்பரம் கூறினார். (அ)

# ஐக்கிய தேசியக் கட்சி பதவிகளில் மாற்றம்?

கொழும்பு, ஒக். 11

ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிகளில் எதிர்வரும் நாட்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் மாற்றம் ஏற்படவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின்போது நிதியமைச்சராக பதவிவகித்த ரவி கருணாநாயக்கவை கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு நியமிப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கட்சியை பலமான நிலைக்கு கொண்டுவரக்கூடிய நபர் ரவி கருணாநாயக்க எனும் கருத்து ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களிடையே நிலவுவதன் காரணமாக இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த நிலையில், ரவி கருணாநாயக்கவை கட்சியின் பொதுச்செயலாளராக நியமிக்கும் தீர்மானத்திற்கு சிலர் மாத்திரம் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு நிறைவில் மேலும் சில பதவிநிலை மாற்றங்கள் இடம்பெறவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ)

# முதல் பெண் மாவீரரான மாலதியின் 36ஆம் ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு

முல்லைத்தீவு, ஒக். 11

முதலாவது பெண் மாவீரர் மாலதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று முல்லைத்தீவில் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

விடுதலைப் போரில் உயிர் நீத்த முதல் பெண் மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் 36ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் நினைவு கூரப்பட்டுள்ளது.

இதன்போது சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் 2 ஆம் லெப். மாலதியின் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி



அஞ்சலி செலுத்தினர்.

சமூக செயற்பாட்டாளர் சகீலா தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் க.தவராசா, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கெங்காதரன், சமூக செயற்பாட்டாளர்களான ஜூட்சன், பீற்றர் இளஞ்செழியன் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# நீதித்துறையையே கைவிட்டுள்ள அரசு எப்படி இனப் பிரச்னைக்கு தீர்வு தரும்?

அநுரகுமார கேள்வி

கொழும்பு, ஒக். 11

"நீதிபதியை வெளியேற்றி நீதித்துறை சமூகத்தை வீதியில் விட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசு, இன, மதப் பிரச்னைகளுக்கு எப்படித் தீர்வை வழங்கும் இந்த அரசை இனியும் நம்புபவர்கள் படுமுட்டாள்களாவர்."

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'இன மற்றும் மதப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணாமல் ஒரு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதால், விரைவில் அதற்குரிய தீர்வுகளைக் காண்பதற்காக அனைத்து தலைவர்களுடனும் பேச்சுகளை நடத்தவுள்ளேன்' - என்று குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த உரை தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சர்வதேச சமூகத்தை மாத்திரமல்ல இங்குள்ள அரசியல்வாதிகளையும், மக்களையும் ஏமாற்றி ஆட்சியைத் தக்கவைக்கலாம் என்று ஜனாதிபதி தலைமையிலான அரசு கனவு காண்கின்றது. தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் அரசின் கனவு தவிடுபொடியாகிவிடும். இங்குள்ள சில அரசியல்வாதிகள் கோமா நிலையில் இருந்தாலும் நாட்டு மக்கள் விழிப்புடன் இருக்கின்றார்கள்.

அவர்கள் ஒரு மாற்றத்தை விரும்புகின்றார்கள். வடக்கு, கிழக்கு சென்று ஒன்றையும், தெற்கில் இன்னொன்றையும், வெளிநாடு சென்று மற்றொன்றையும் மாறி மாறி சொல்லித் திரியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பகிரங்கமாக ஒரு சவாலை விடுகின்றோம். அதாவது முடிந்தால் தேசிய ரீதியில் ஒரு தேர்தலை நடத்திக் காட்டுங்கள்."-என்றார். (அ)

# டலஸின் சகாக்கள் சஜித்துடன் சங்கமம்!

கொழும்பு, ஒக். 11

டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர் என தெரியவருகின்றது.

இதற்கான பேச்சுகள் இடம்பெற்றுவருகின்றன எனவும், தேர்தலொன்று அறிவிக்கப்பட்ட பிறகு அல்லது அதற்கு முன்னர் இவர்கள் இணையக்கூடும் எனவும் அறியமுடிகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியில் பங்காளியாக இணையுமாறு டலஸ் அணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கான பேச்சுகளும் இடம்பெற்றன.

எனினும், டலஸ் அணியில் உள்ள சிலர் சஜித் கூட்டணியில் இணைவதில் இழுத்தடிப்பு செய்துவருகின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே சில உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைய முன்வந்துள்ளனர்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார ஆகியோர் தற்போது சஜித் அணியுடன் நெருக்கமாக செயற்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## கடன்...

இடம்பெற்றவை தொடர்பில் வேறு விடயங்களை வெளியிட அவர் மறுத்து விட்டார்.

நாட்டின் அண்மை நாடாகவும் நேர்மையான நண்பராகவும் அதிக திறன்களுக்கு இலங்கைக்கு சீனா உதவிகளை வழங்கி வருகிறது என்றும் இதன்போது அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளில் சீனா முதன்மையானது. இலங்கையின் வெளிநாட்டு கடன்களில் 51 வீதமானவை அந்த நாடு வழங்கிய கடனாகும். அரச தகவலின்படி 2022 ஆம் ஆண்டு இறுதியில் எக்ஸிம் வங்கி 410 கோடி டொலர்களை 11 வீத வட்டி அடிப்படையில் இலங்கை பெற்றுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, பாரிஸ் கிளப் உள்ளிட்டவை சீனாவின் பங்களிப்பு இன்றி கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்துக்கு தயாராக உள்ளன. இந்த நிலையில், சீனாவின் இந்த அறிவிப்பின் மூலம் சர்வதேச நாணய நிதியம் வழங்கும் இரண்டாம் கட்ட கடனான 33 கோடி டொலர்களை இலங்கை இலகுவாகப் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.தே.கட்சிக்கு...

கொண்டுள்ளார்கள் என ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். ஆனால், தற்போது தேர்தலை நடத்த முடியாது என்று தேர்தலுக்கு எதிராக போர் கொடி உயர்த்துகிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நிர்வாகத்தை நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டார்களாயின் தாராளமாக தேர்தலை நடத்தலாம் தானே. 2024 ஆம் ஆண்டு தேர்தல் வருடம் என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை போன்று ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது.

தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சிகளை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்துவோம். ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றை அரசியல் சூழ்ச்சிகளால் பிற்போட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். வரலாற்றில் பல விளைவுகள் பதிவாகியுள்ளன.

கட்சியின் கொள்கைக்கு எதிராக நாங்கள் செயற்பட்டுள்ளதாகவும் எமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.

பொதுஜன பெரமுன கட்சியின் அடிப்படை கொள்கைக்கும்,கட்சி யாப்புக்கு எதிராக செயற்படும் போது அதற்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது என்பதற்காகவே கட்சியில் இருந்து வெளியேறி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுகிறோம்.

எமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக சாகர காரியவசம் கடந்த ஒரு வருட காலமாக குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆனால் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.கட்சியின் கொள்கைகளை நாங்கள் மீறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்த பொதுஜன பெரமுனவின் 134 உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாகர காரியவசத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் பொதுஜன பெரமுன ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடிபணிந்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைவார்கள் என்பதை உறுதியாக குறிப்பிட முடியும் - என்றார்.

## மின்சார...

பயன்பாட்டுச் சட்டத் தின்படி மக்களின் கருத்துகளைப் பெற 21 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என் றும் கூறினார்.

எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் மக்களிடம் வாய்மூலம் கருத்துகளை பெற்றுக்கொள்ள சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்த அதிகாரி, அதன் பின்னரே அனுமதி வழங்குவதா இல்லையா என்பதை தீர்மானிக்க முடியும் என்றும் சொன்னார். (ஐ)

## பொருளாதார...

என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடன் மீட்சி திட்டம் முடிவடைந்த பின்னர் அரசாங்கத்தின் எதிர்காலப் பயணம் குறித்து அறிவிக்க எதிர்பார்க்கிறோம். முதலில், வேகமாக வளர்ந்து வரும், அதிக போட்டித்தன்மை கொண்ட தொழில்நுட்பம் சார்ந்த பொருளாதாரத்தை நாம் உருவாக்க வேண்டும். இரண்டாவதாக, டிஜிற்றல் முறைமை அடிப்படையிலான பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும், மூன்றாவதாக, பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும்.

இன்று இலங்கை பசுமைப் பொருளாதாரத் திட்டங்களுக்குள் பிரவேசித்துள்ளதுடன் அதற்கான பரந்தளவிலான பணிகளை முன்னெடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தை முன்னெடுத்து செல்ல நமக்கு புதிய கல்வி முறையும் அறிவும் தேவை. அதற்கு, தற்போதுள்ள பல்கலைகளை நவீனமயமாக்கி, புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க வேண்டும்.

அரசு மற்றும் தனியார் துறையின் பங்களிப்புடன் இந்தப் பல்கலைக்கழகங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களுக்கு இலாபத்தை மீள முதலீடு செய்யும் முறை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், லாபத்தைப் பகிர்ந்து கொள்ளும் பல்கலைக்கழகங்களை நிறுவ முடியும்.

இந்த பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை முடிப்பதற்காக மாணவர்களுக்கு மானிய வட்டியுடன் கடன் வழங்கும் திட்டத்தையும் தொடங்க திட்டமிட்டுள்ளோம் - என்றும் கூறினார். (ஐ)

## இலங்கை...

புதன்கிழமை ஆரம்பமாகிறது. இதில், பங்கேற்பதற்காகவே அவர் இலங்கை வந்தார்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அவரை உயர்கல்வி அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் நேரில் சென்று வரவேற்றார். அப்போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயும் உடனிருந்தார்.

இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் இன்றைய தினம் இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் 23ஆவது அமைச்சர் மட்ட கூட்டத்தில் பங்கேற்கவுள்ளார். தொடர்ந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரச உயர்மட்டத்தினரையும் சந்திக்கவுள்ளார்.

இதைத் தொடர்ந்து நாளை திருகோணமலை செல்லவுள்ள அவர் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உள்ளிட்டவர்களைச் சந்திப்பார். இதன்போது, இந்திய நிதி உதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ள சில திட்டங்களை அவர் பயனாளிகளுக்கு கையளிக்கவுள்ளார்.

தொடர்ந்து திருகோணமலையில் இந்தியா முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் குறித்தும் ஆராய்வார். அத்துடன், வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோணஸ்வரர் ஆலயத்திலும் வழிபாட்டில் ஈடுபடவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆஸியுடன் இலங்கை முதலீட்டு ஒப்பந்தம்!

கொழும்பு, ஒக். 11

இலங்கை, அவுஸ்திரேலியாவுக்கு இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டக ஒப்பந்த காலத்தை மேலும் ஐந்தாண்டுகளுக்கு நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அவுஸ்திரேலியா இலங்கையின் முக்கியமான நேரடி வெளிநாட்டு முதலீட்டு தரப்பாக இருப்பதுடன், சுற்றுலா பயணிகள் அதிகமாக வருகைதரும் 5ஆவது நாடாகவும் உள்ளது.

இரு நாடுகளுக்கிடையில் இருதரப்பு வர்த்தக மற்றும் முதலீட்டுத் தொடர்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் 2017.11.02 அன்று இலங்கை அவுஸ்திரேலியா வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டக ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கு இயலுமாகும் வகையில் நேற்று முதல் எதிர்வரும் ஐந்து (05) ஆண்டுகளுக்காக குறித்த ஒப்பந்தத்தை நீடிப்பதற்காக வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# மூவருக்கு மரண தண்டனை!

கொழும்பு, ஒக். 11

31 வருடங்களுக்கு முன்னர் கம்புகளால் தாக்கி நபர் ஒருவரை கொன்றதாக குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கு களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன மரண தண்டனை விதித்து, செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தார். மற்றுமொருவருக்கு 10 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாட்களில் நவுட்டுடுவ, கீரந்திடிய பிரதேசத்தில் கம்புகள் மற்றும் தடிகளால் தனபால பெர்னாண்டோ கொல்லப்பட்டமை 5 கண்ணுவே பிரதேசத்தில் மேகம்வத்தை கொலனியில் வசிக்கும் தனபால பெர்னாண்டோ மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அந்த வழக்கில், 3, 4 மற்றும் 5ஆம் பிரதிவாதிகளான வலகெதர, பல்லே கொடவைச் சேர்ந்த மல்முத்துகே தயாரத்ன எனப்படும் ஒலிவர், நாவுட்டுடுவ



பிரதேசத்தைச் சேர்ந்த அனகிபுர ஆரியரத்ன என்ற லொக்கா, கிரியமத் கன்வான் பகுதியைச் சேர்ந்த கிரிமத்லக்க பெர்னாண்டோ என்றழைக்கப்படும் தர்மதிலக பெர்னாண்டோ ஆகியோருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டது.

1ஆம் பிரதிவாதியான பேருவளை, கலவில பகுதியைச் சேர்ந்த ரத்னா என்ற அனகிபுர பிரேமதிலக என்பவருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனையும் மூன்று இலட்சம் ரூபாய் நட்ட ஈடும், விதிக்கப்பட்டது. மேற்படி நட்ட ஈட்டை செலுத்தத் தவறினால் மேலும் இரண்டு வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்த வழக்கில் 2ஆவது குற்றவாளி, இந்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த போதே புற்றுநோயால் மரணமடைந்துவிட்டார் என நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து, நாவுட்டுடுவ கீரந்திடிய பிரதேசத்தில் வைத்து கம்புகளால் அடித்து கொலை சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் வெலிப்பன்ன பொலிஸார் கைது செய்தனர். (ஐ)

## சர்வதேச...

கழகங்களால் வழங்கப்படுகின்ற மருத்துவப் பட்டங்களை எமது நாட்டில் அங்கீகரிப்பதற்கு இயலுமாகும் வகையில் தேவையான சட்டரீதியான ஏற்பாடுகளை விதிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

## சகல...

விவசாய கண்காட்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் வரவு - செலவு திட்டம் ஊடாக பாடசாலைகளில் அத்தியாவசிய மனித வளங்கள் மற்றும் பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

2030 ஆம் ஆண்டளவில் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலை மதிய உணவு இலவசமாக வழங்கப்படும். இலவச மதிய உணவுக்கான ஏற்பாடுகளை செய்வது தொடர்பான ஆலோசனைகள் தற்போது நடைபெற்று வருவதோடு பிரான்ஸ் அரசாங்கத்துடனும் தொடர்புடைய கட்சிகளுடனும் இது தொடர்பான ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவை அனைத்துக்கும் மத்தியில், குழந்தைகளின் கல்வி தடையின்றி பேணப்பட வேண்டும் என்றும், நிலையான கல்வித் திட்டத்தைத் தொடர அனைவரின் ஆதரவையும் எதிர்பார்ப்பதாகவும் போர் மோதல்கள், காலநிலை மாற்றம், போன்ற அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்து இந்தக் கல்வி சவால்களை வெற்றிகொள்ள வேண்டும் - என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். (ஐ)

## பெரமுனவில்...

முன்னிலைப்படுத்தி செயல்படுவோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்‌ஷவின் அரசியல் கொள்கைக்கு எதிராக 45 வருட காலம் அரசியல் செய்த ரணில் விக்கிரமசிங்கவை நாட்டுக்காக ஜனாதிபதியாக்கி அவருடன் ஒன்றிணைந்து செயல்படுகிறோம். எதிராக செயல்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்முடன் இணைய முடியுமாயின் மகிந்த ராஜபக்‌ஷவுடன் ஒன்றிணைந்து செயல்பட்டவர்கள் - பல்வேறு காரணிகளால் பிரிந்து சென்றவர்கள் தாராளமாக ஒன்றிணையலாம்.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் தரப்பினர் மீண்டும் எம்முடன் ஒன்றிணையலாம். அதற்கு கால அவகாசம் வழங்கப்படும். சகல தரப்பினரும் இணைந்து செயல்பட வேண்டிய தருணம் தோற்றம் பெற்றுள்ளது. எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் கட்டணம் ஒவ்வொரு மாதமும் அதிகரிப்பதால் பொதுமக்கள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளார்கள்.

2024ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தேர்தல் முறையில் மாற்றம் என்ற ஆயுதத்தை கையிலெடுக்கும் அரசு!

## தேர்தல்களை ஒத்திவைக்கும் நோக்கமா?

கொழும்பு, ஒக். 11

**ஜனாதிபதித் தேர்தல் உட்பட தேசிய தேர்தல்களை ஒத்திவைக்கும் நோக்கத்திலேயே பாராளுமன்றத் தேர்தல் முறையை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது எனக் கூறப்படுகின்றது.**

கலப்பு முறையின் கீழ் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அனுமதி கோரிய அமைச்சரவை தீர்மானத்தை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்துள்ளார்.

யோசனையின் பிரகாரம் தொகுதிவாரி முறையின் கீழ் 160 உறுப்பினர்களும் விகிதாசார முறைமையின் கீழ் 65 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.

இது தொடர்பான பணிகளை முன்னெடுப்பதற்காக அமைச்சரவை உபகுழு அமைக்கப்படவுள்ளது.

தற்போது விருப்பு வாக்குகள் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

இந்த தேர்தல் முறைமையில் மாற்றம் தேவை என கடந்த காலத்தில் அனைத்து தரப்பாலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இதற்கான பல முயற்சிகளும் எடுக்கப்பட்டிருந்தன.

2002ஆம் ஆண்டுமுதல் 2004 ஆம் ஆண்டுவரை பிரதமராக இருந்த தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின்போது பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்று தேர்தல்முறை மாற்றத்திற்கான பணிகளை முன்னெடுக்க நியமிக்கப்பட்டது. தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன எதிர்க்கட்சி எம்.பியாக இந்த குழுவுக்கு தலைமை தாங்கியிருந்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஏற்பட்ட கடுமையான அரசியல் நெருக்கடிகளால் இந்த பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களை ஒத்திவைக்கும் நோக்கிலேயே தேர்தல் முறை மாற்றம் என்ற ஆயுதத்தை அரசாங்கம் கையில் எடுத்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் எந்தவொரு முயற்சிக்கும் கடுமையான எதிர் நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. (அ)

# தேர்தல்களை ஒத்திவைப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல

### கூறுகின்றார் அமைச்சர் விஜேதாஸ

கொழும்பு, ஒக். 11

தேர்தல்முறை மாற்றத்தின் ஊடாக தேர்தல்களை ஒத்திவைப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேர்தல்முறை மாற்றம் தொடர்பிலான யோசனை ஒன்றை நீதி அமைச்சர் நேற்று முன் தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்திருந்தார். இது தொடர்பில் ஆராய அமைச்சரவை உப குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நீதி அமைச்சர்,

"அரசாங்கம் தேர்தல் முறையை மாற்றுவது குறித்து ஆலோசனைகளை நடத்தி வருகிறது. அதனால்தான் நான் முன்வைத்த தீர்மானத்தை ஆராய அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முறை சீர்திருத்தங்கள் என்ற போர்வையில் தேர்தல்களை ஒத்திவைப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல - என்றார்.

தேர்தல் முறை மாற்றம் என்ற போர்வையில் கடந்த 2017ஆம் ஆண்டு முதல் மாகாண சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று உள்ளூராட்சிமன்றங்களுக்கான ஆயுட்காலம் முடிவடைந்த இரண்டு ஆண்டுகளை எட்ட உள்ள நிலையில் அவற்றுக்கான தேர்தலும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான அண்மைய சந்திப்பின்போது தேர்தல் சீர்திருத்தங்கள் அல்லது எந்தவொரு தேர்தலை ஒத்திவைப்பது குறித்தும் ஒருபோதும் கலந்துரையாடவில்லை என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (அ)

# பம்பைமடுவில் விபத்து! பெண் ஒருவர் மரணம்!!

வவுனியா, ஒக். 11

வவுனியா பம்பைமடு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியா குருக்கல் புதுக்குளம் பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று பம்பைமடுப் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த வேளையில் மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குருக்கல் புதுக்குளத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயாரான விஜயரத்தினம் ஜெயந்தினி என்பவர் உயிரிழந்துள்ளார்.

இதன் போது இவருடன் பயணித்த இவரது மகனான 22 வயதுடைய சிங்றோஜன் என்பவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொதுவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த 24 மணி நேரத்திற்குள் வவுனியாவில் ஏற்பட்ட இரு வேறு விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் இரு விபத்துமே கட்டாக்காலி மாடுகளினால் ஏற்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையின் சீர்திருத்தங்கள் பலனளிக்க ஆரம்பித்துள்ளன

### மொராக்கோ மாநாட்டில் நாணய நிதிய பிரதிநிதி

கொழும்பு, ஒக். 11

இலங்கை தொடர்ந்தும் தனது பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என சர்வதேச நாணய நிதியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மொராக்கோவில் ஆரம்பமாகியுள்ள சர்வதேச பொருளாதார மாநாட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி டானியல்லே இதனை தெரிவித்தார்.

தற்போதைய சீர்திருத்தங்கள் பலனளிக்க ஆரம்பித்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சந்தைக் காவலாளிகள் மீது வன்முறைக் குழு தாக்குதல்!

## சங்கானையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 11

சங்கானை பொதுச் சந்தைக்குள் இரவு வேளை அத்துமீறி நுழைந்த குழு ஒன்று பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தி மிரட்டிவிட்டுச்சென்றுள்ளது.

சங்கானை பொதுச்சந்தை பாதுகாப்பு நடவடிக்கையில் தனியார் நிறுவனம் ஒன்றின் பாதுகாப்புக் கடமையாளர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது, அங்கு வந்த போதையில் இருந்தவர்கள் என்று தெரிவிக்கப்படும் நபர்கள், யாரோ ஒருவருடைய பெயரைக் கூறி அவர் நிற்கிறாரா? என்று கேட்டிருக்கின்றனர். இரவு வேளை என்பதால் அவர் இல்லை என்று பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இதனை அடுத்து வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவர் பூட்டப்பட்டிருந்த கதவின் மீது ஏறி உள் நுழைந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனை அடுத்து அயலில் இருந்தவர்கள் சிலர் வந்து பாதுகாப்பு உத்தியோகத்தரைக் காப்பாற்றியிருக்கின்றனர். சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளது.

சங்கானைப் பகுதியில் சமூகவிரோதச் செயற்பாடுகள், திருட்டுச் சம்பவங்கள் உட்பட்ட பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளில் சில குழுக்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுவரும் நிலையில் பொதுச் சந்தை ஒன்றின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றமை தொடர்பில் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ)

# சிமெந்து விலை உயரும்?

கொழும்பு, ஒக். 11

சிமெந்து இறக்குமதி நிறுவனங்கள் விலையை அதிகரிக்கச் செயற்படுவதாகவும் அதனைத் தடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இலங்கை ஐக்கிய வர்த்தக மன்றத்தின் தலைவரும் தேசிய நிர்மாண சங்கத்தின் முன்னாள் தலைவருமான சுசந்த லியனாராச்சி தெரிவித்தார்.

எல்பிட்டிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலம் கைத்தொழில் துறை மற்றும் அனைத்து வர்த்தகத்துறைகளும் அதிக செலவீனங்களைச் சுமக்க நேரிடும் எனவும், இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் நேற்றுமுன்தினம் வெளியிட்டிருப்பதால் இதனைக் கட்டுப்படுத்தவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# உளநல தினத்தை முன்னிட்டு நேற்று வவுனியாவில் விழிப்புணர்வு நாடகம்






வவுனியா, ஒக். 11

வவுனியாவில் உளநல தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வு நாடகம் நேற்று மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அரங்காலயா கலைக்கூட கலைஞர்களினால் குறித்த உளநலன் தொடர்பான விழிப்புணர்வு நாடகம் நிகழ்த்தப்பட்டிருந்தது.

வவுனியா பிரதேச செயலகமும், மாவட்ட பொது வைத்தியசாலை உளநல பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் உளநல வைத்தியர் எஸ். சுதாகரன், வைத்தியர் திருமதி வைதேகி திலீபன், மகளீர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுகாசினி சிவதர்சன், உளநலத்துறை உத்தியோகத்தர் திருமதி துஷாந்தன் பிரியதர்சினி, பாடசாலையின் அதிபர் நா. இந்திரகுமார், ஈச்சங்குளம் கிராம சேவகர் ஜே. அமலதாஸ் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பரம எதிரிகள் மோதும் போட்டி;

# 14ஆயிரம் மேலதிக ரிக்கெட்டுகள் வழங்கும் இந்திய கிரிக்கெட் சபை

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் அதிக கவனத்தை ஈர்க்கும் மற்றும் பேசப்படும் போட்டி இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையேயான போட்டியாகும்.

போட்டிக்கான திகதி இம்மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மைதானத்தின் கொள்ளளவுக்கு அதிகமான பார்வையாளர்கள் அந்தப் போட்டியில் பங்கேற்பார்கள் என்று வர்ணனையாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் மிகப்பெரிய மைதானங்களில் ஒன்றான அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் இப்போட்டி நடைபெற உள்ளது.

இந்த மைதானத்தில் 132,000 பார்வையாளர்கள் போட்டியை கண்டுகழிக்க முடியும்.

எவ்வாறாயினும், இந்த போட்டிக்கு இன்னும் 04 நாட்கள் மீதமுள்ள நிலையில் மேலதிகமாக 14,000 டிக்கெட்டுகள் வழங்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வாறாயின் 146000 பேருக்கு இந்தப் போட்டியை கண்டுகழிக்கும் வாய்ப்பு கிடைக்கும்.

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இதுவரை 205 போட்டிகளில் மோதியுள்ளன. அதில் பாகிஸ்தான் அணி 88



போட்டிகளிலும் இந்தியா அணி 73 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. 44 போட்டிகளில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற ஆசியக் கிண்ணப் போட்டிகளில் கடைசியாக இரு அணிகளும் மோதியிருந்தன. இந்தப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)




## ஒலிம்பிக்கிலும் இனி கிரிக்கெட்

2028 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் இடம்பெறவுள்ளது. இந்த ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டை சேர்க்க பரிந்துரைக்கப்பட்டு இருக்கிறது.

உலகின் மிகப்பெரிய விளையாட்டு போட்டியான ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டை சேர்க்க வேண்டும் என நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது.

1900 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் மட்டும் கிரிக்கெட் இடம் பிடித்தது. அதன் பிறகு விடுப்பட்ட கிரிக்கெட்டை மீண்டும் இணைக்க நூற்றாண்டு கால முயற்சி ஒரு வழியாக வெற்றியின் விளிம்பிற்கு வந்துள்ளது.

குறித்த பரிந்துரை பட்டியலில் பிளாக் கால்பந்தாட்டம், பேஸ்பால், சாப்ட்பால் ஆகிய விளையாட்டுகளும் இடம் பெற்றுள்ளன.

141ஆவது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி கூட்டம் மும்பையில் வருகின்ற 15 ஆம் திகதி நடக்கிறது. இந்த கூட்டத்தில் கிரிக்கெட்டை சேர்க்க ஒப்புதல் வழங்கப்பட இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## முதல்முறையாக ரி-20 கிரிக்கெட் உலகக்கிண்ண தொடரில் கனடா!

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள 9ஆவது ஹைசிசி ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட்ஹ தொடருக்கு கனடா அணி தகுதி பெற்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெறவுள்ள இத்தொடரில் மொத்தமாக 20 அணிகள் பங்கேற்கவுள்ளன. இத் தொடரில் ஐசிசி ரி-20 தரவரிசையில் முதல் 10 இடங்களில் உள்ள அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. மற்ற அணிகளுக்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதில் பெர்முடாவின் ஹாமில்டனில் நடைபெற்ற அமெரிக்க பிராந்திய தகுதிச் சுற்று இறுதிப் போட்டியில் பெர்முடா மற்றும் கனடா அணிகள் மோதின. இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கனடா முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்து 132 ஓட்டங்களை எடுத்தது.

இதனையடுத்து 133 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களம் இறங்கிய பெர்முடா அணி, கனடா வீரர்களின் சிறப்பான பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 16.5 ஓவர்களில் 93 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதனால் கனடா அணி 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் கனடா அணி அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஐசிசி ரி-20 உலகக்கிண்ண தொடருக்கு தகுதி பெற்றுள்ளது.

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கு கனடா அணி தகுதி பெறுவது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.



# நியூஸிலாந்துக்கு இரண்டாவது வெற்றி




இந்தியாவில் நடைபெற்றுவரும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் ஒரே ஒரு இணைப்பு நாடான நெதர்லாந்துக்கு எதிராக ஹைதராபாத் ரஜிவ் காந்தி விளையாட்டரங்கில் நடைபெற்ற லீக் போட்டியில் 99 ஓட்டங்களால் மற்றொரு இலகுவான வெற்றியை நியூஸிலாந்து ஈட்டியது.

முன்வரிசை வீரர்கள் ஐவரின் திறமையான துடுப்பாட்டங்கள் நியூஸிலாந்தின் வெற்றிக்கு வித்திட்டன.

அத்துடன் உலகக் கிண்ண கிரிக்கெட்டில் தனது முதலாவது 5 விக்கெட் குவியலைப் பதிவு செய்த மிச்செல் சென்ட்னரும் நியூஸிலாந்தின் வெற்றியில் முக்கிய பங்காற்றினார்.

நடப்பு சம்பியன் இங்கிலாந்துக்கு எதிரான ஆரம்பப் போட்டியில் வெளிப்படுத்திய ஆக்ரோஷத்தை நியூஸிலாந்திடம் இந்தப் போட்டியில் காணவில்லை. ஆனால், வெற்றியை குறிவைத்து நியூஸிலாந்து அபாரமாக துடுப்பெடுத்தாடியது.

டெவன் கொன்வே, வில் யங் ஆகிய இருவரும் 67 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக் கொடுத்தனர்.

கொன்வே 32 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்ததைத் தொடர்ந்து வில் யங், ஆரம்பப் போட்டியில் ஹீரோவான ரச்சின் ரவிந்த்ர ஆகிய இருவரும் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 2ஆவது விக்கெட்டில் 77 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியின் மொத்த எண்ணிக்கைக்கு பலம் சேர்த்தனர்.

வில் யங் 80 பந்துகளில் 7 பவுண்டறிகள், 2 சிக்ஸ்களுடன் 70 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தார். ரச்சின் ரவிந்த்ர 51 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பெற்று 3ஆவதாக ஆட்டம் இழந்தார். (185 - 3 விக்.)

அவர்களைத் தொடர்ந்து 4ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த டெரில் மிச்செல், அணித் தலைவர் டொம் லெதம் ஆகிய இருவரும் 53 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண் ணிக்கை 230 ஓட்டங்களைக் கடக்க உதவி னர்.

எனினும் டெரில் மிச்செல் (48), க்ளென் பிலிப்ஸ் (4), மார்க் செப்மன் (5) டொம் லெதம் (53) ஆகிய நால்வரும் சீரான இடைவெளியில் ஆட்டம் இழந்தனர். (293 - 7 விக்)

அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய மிச்செல் சென்ட்னர் 17 பந்துகளில் 36 ஓட்டங்களுடனும் மெட் ஹென்றி 10 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் ரோலோவ் வென் டேர் மேர்வ் 56 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் போல் வென் மீக்கரன் 59 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ஏரியன் டட் 62 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

நியூஸிலாந்தினால் நிர்ணயிக்கப்பட்ட 323 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து 46.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும இழந்து 223 ஓட்டங்களைப் பெற்று இரண்டாவது நேரடி தோல்வியைத் தழுவியது.

நெதர்லாந்தின் முதல் ஏழு துடுப்பாட்ட வீரர்களும் இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்ற போதிலும் இருவர் மாத்திரமே 30 அல்லது அதற்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றனர்.

நெதர்லாந்தின் விக்கெட்கள் சீரான இடைவெளியில் வீழ்ந்ததுடன் ஸ்திரமான இணைப்பாட்டம் எதுவும் இடம்பெறவில்லை.

கொலின் அக்கமன், அணித் தலைவர் ஸ்கொட் எட்வேர்ட்ஸ் ஆகிய இருவரும் 5ஆவது விக்கெட்டில் பகிர்ந்த 40 ஓட்டங்களே நெதர்லாந்து இன்னிங்ஸில் சிறந்த இணைப்பாட்டமாகப் பதிவானது.

துடுப்பாட்டத்தில் கொலின் அக்கமன் 69 ஓட்டங்களையும் ஸ்கொட் எட்வேர்ட்ஸ் 30 ஓட்டங்களையும் சைப்ராண்ட் ஏஞ்சல்ப்ரெச் 29 ஓட்டங்களையும் தேஜா நிதமனுரு 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மிச்செல் சென்ட்னர் 59 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களைம் மெட் ஹென்றி 40 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

(அ)

# புரேவெஸ்ட்னிக்: உலகின் எந்த இடத்தையும் அழிக்கும் ‘நிகரற்ற ஆயுதத்தை’ ரஷ்யா உருவாக்கி இருக்கிறதா?




அணுசக்தியில் இயங்கும் க்ரூயிஸ் ஏவுகணையின் இறுதிச் சோதனையில் ரஷ்யா வெற்றி பெற்றுள்ளதாக ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின் தெரிவித்துள்ளார். இந்த ஏவுகணை அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்டதாக இருக்கும்.



புடினின் செய்தித் தொடர்பாளர் நியூயார்க் டைம்ஸ் அறிக்கையை நிராகரித்ததை தொடர்ந்து புடினின் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

புரேவெஸ்ட்னிக் என்ற ஆயுதத்தை ரஷ்யா சோதிக்கப் போவதாக அமெரிக்க நாளிதழ் தனது அறிக்கையில் கூறியிருந்தது.

இந்த சோதனை ஆயுதம் பற்றிய முதல் அறிவிப்பு 2018 ஆம் ஆண்டு செய்யப்பட்டது. அதன் தாக்குதல் தூரம் கிட்டத்தட்ட ’வரம்பற்றது’ என்று கூறப்படுகிறது.

**இந்த ஏவுகணை ஏன் சிறப்பு வாய்ந்தது?**

இந்த ஏவுகணை பற்றி அதிக தகவல்கள் கிடைக்கவில்லை. ரஷ்ய அரசும் இது பற்றி அதிகம் கூறவில்லை. ஆனால் இந்த ஏவுகணை அணு உலையை அடிப்படையாகக் கொண்டது என்று இதுவரை அறியப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

எளிமையான வார்த்தைகளில் சொல்வதென்றால் இந்த ஏவுகணை, அணு உலையில் இருந்தே தனக்கான ஆற்றலைப் பெறுகிறது. கூடவே இது ஒரு க்ரூயிஸ் ரக ஏவுகணையாகும். இது அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்டது.

ஆனால் அதன் திறன்கள் குறித்து அதிகாரப்பூர்வமாக அதிக தகவல்கள் கிடைப்பதற்கு இல்லை. அதன் முந்தைய சோதனைகள் தோல்வியடைந்ததாக முன்பு வெளியான அறிக்கைகள் கூறுகின்றன.

சோச்சி நகரில் நடைபெற்ற சந்திப்பின் போது அதிபர் புடின் வெளியிட்ட இந்த அறிக்கை, சுயாதீனமாக சரிபார்க்கப்படவில்லை. இது தொடர்பாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் இதுவரை எந்த தகவலும் தெரிவிக்கவில்லை

ஆர்டிக் பகுதியில் உள்ள தொலைதூர தளத்தில் ரஷ்யா புதிய கட்டமைப்புகளை கட்டியிருப்பதை கடந்த வாரம் வெளியான செயற்கைக்கோள் படங்கள் சுட்டிக் காட்டின.

சோவியத் யூனியன் காலத்தில் சோவியத் அரசு, அணுகுண்டு சோதனை நடத்தி வந்த இடம் இது. வடக்கு பேரண்ட்ஸ் கடலில் அமைந்துள்ள நோவாயா ஜெம்லியா என்ற தீவுக் குழுவில் கட்டுமானப் பணிகள் நடைபெறுவதை இந்தப் படங்கள் காட்டுகின்றன.

“நாங்கள் தற்போது நவீன வகையான மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதங்கள் தொடர்பான பணிகளை கிட்டத்தட்ட முடித்துவிட்டோம். இது பற்றிய அறிவிப்பை நான் சில ஆண்டுகளுக்கு முன்பே வெளியிட்டிருந்தேன்,” என்று ரஷ்யாவின் சோச்சி நகரில் உள்ள கருங்கடல் ரிசார்ட்டில் நடைபெற்ற சந்திப்பின் போது புடின் கூறினார்.

புடினின் இந்த அறிக்கை ரஷ்யாவின் அரசு தொலைக்காட்சி சேனலில் ஒளிபரப்பப்பட்டது. மேலும், “உலகின் எந்த இடத்தையும் தாக்கி அழக்கவல்ல, அணுசக்தியில் இயங்கும் புரேவெஸ்ட்னிக் க்ரூயிஸ் ஏவுகணையின் வெற்றிகரமான கடைசி சோதனை நடத்தப்பட்டுள்ளது” என்றும் அவர் கூறினார்.

அமெரிக்கா, துருக்கி உள்ளிட்ட பல மேற்கத்திய நாடுகள் உறுப்பினர்களாக உள்ள ராணுவ அமைப்பான நேட்டோ, இந்த ஏவுகணைக்கு “ஸ்கைஃபால்” என்ற குறியீட்டுப் பெயரை வைத்துள்ளது. இந்த ஏவுகணையில் உள்ள அணு உலை திட எரிபொருள், ராக்கெட் பூஸ்டர்கள் மூலம் காற்றில் வீசப்பட்ட பிறகு இது செயல்பாட்டிற்கு வருகிறது.



இருப்பினும், 2017 மற்றும் 2019 க்கு இடையில் நடத்தப்பட்ட சோதனைகள் தோல்வியடைந்ததாக ஆயுதப் பெருக்கத்தை நிறுத்துவதற்கு ஆதரவாக செயல்படும் “அணுசக்தி அச்சுறுத்தல் முன்முயற்சி” குழுவை மேற்கோள் காட்டி அமெரிக்க செய்தித்தாள் நியூயார்க் டைம்ஸ், தனது அறிக்கையில் எழுதியுள்ளது.

**அணு ஆயுதத் தாக்குதல் குறித்து புடின் கூறியது என்ன?**

சர்மத் என்ற பெயரிலான கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைக்கான பணிகளும் நிறைவடைந்துள்ளதாக ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார். ரஷ்யா தனது அணுசக்தி கொள்கையை மாற்றத் திட்டமிடவில்லை என்று இந்தத் தகவலைத் தெரிவித்த பிறகு புடின் கூறினார்.



ரஷ்யா எந்த சூழ்நிலையில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் என்பதை அணுசக்தி கோட்பாடு அல்லது அணுசக்தி கொள்கை தீர்மானிக்கிறது.

ரஷ்யாவின் இருப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்றும் ஆரோக்கியமான மனமும், நல்ல நினைவாற்றலும் உள்ள எவரும் ரஷ்யாவுக்கு எதிராக அணு ஆயுதத்தாக்குதல் நடத்துவதை கருத்தில் கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

ஆனால் 1996 ஆம் ஆண்டின் விரிவான அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தத்திற்கு தான் அளித்த ஒப்புதலை ரஷ்யா, கொள்கையளவில் திரும்பப் பெற முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

‘அமெரிக்காவும் இதில் கையெழுத்திட்டுள்ளது. ஆனால் அதை ஒருபோதும் செயல்படுத்தவில்லை. அத்தகைய சூழ்நிலையில், ரஷ்யாவும் அதையே செய்ய முடியும்,” என்றார் அவர்.

**ரஷ்யாவின் நிகரற்ற ஆயுதம்?**

இதுவரை உலகில் இந்த ஏவுகணைக்கு போட்டியாக எதுவும் இல்லை என்றும், வரும் பல ஆண்டுகளில் இதற்கு இணையான ஏவுகணை எதுவும் இருக்காது என்றும் விளாதிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

“இது உண்மையில் ஒரு சிறப்பு ஆயுதம். ரஷ்யாவின் போரிடும் திறனை இது கணிசமாக அதிகரிக்கும். மிரட்டும் அறிக்கைகள் மூலம் ரஷ்யாவை அச்சுறுத்த முயற்சிப்பவர்கள் இனி இருமுறை யோசிக்க வேண்டும்,” என்றார் அவர்.

இந்த ஏவுகணை தயாரிக்கும் பணி பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. ஆனால் சமீபத்தில்தான் அதன் வெற்றிகரமான சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இந்த சோதனை முன்பு பலமுறை ஒத்திவைக்கப்பட்டது. ரஷ்யா நீண்ட காலமாக இந்த திசையில் முயற்சிகளை மேற்கொண்டு வந்தது. அத்தகைய சூழ்நிலையில் அதன் வெற்றிகரமான சோதனை ரஷ்யாவிற்கு ஒரு முக்கியமான மைல்கல்லாகும்.

**பிரிகோஜின் பற்றி என்ன சொன்னார்?**

இந்த சந்திப்பின் போது, வாக்னர் கூலிப்படை தலைவர் எவ்கெனி பிரிகோஜினின் அகால மரணம் குறித்தும் புடின் கருத்து தெரிவித்தார். புடினுக்கு நெருக்கமானவர் என்று கூறப்படும் எவ்கெனி பிரிகோஜின் கடந்த மாதம் ஒரு விமான விபத்தில் உயிரிழந்தார்.

இந்த விபத்து குறித்து கருத்து தெரிவித்த புடின், இது குறித்து விசாரணைக் குழுவின் தலைவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு தனக்கு தகவல் தெரிவித்ததாக கூறினார். விமான விபத்தில் ஏவுகணை தாக்குதல் போன்ற வெளிப்புற காரணிகளின் பங்கு எதுவும் இல்லை என்று அவர் கூறினார்.

உயிரிழந்தவர்களின் உடல்களில் கையெறிகுண்டுகளின் துண்டுகள் காணப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். இறந்தவர்கள் மது அல்லது வேறு போதைப் பொருட்களை உட்கொண்டார்களா என்பதையும் புலனாய்வாளர்கள் ஆராய வேண்டும் என்று தான் கருதுவதாகவும் புடின் கூறினார்.

இந்த விமான விபத்துக்கான காரணம் குறித்து இதுவரை அதிகாரப்பூர்வ அறிக்கை எதுவும் வெளியாகவில்லை.

# ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய சிறந்த தெரிவு



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு முன்னதாக நிலவிய பொருளாதார மற்றும் அரசியல் குழப்பநிலைக்கும் அதற்கு பின்னரான உறுதிப்பாட்டுக்கும் இடையே அடிக்கடி செய்யப்பட்டுவந்த ஒப்பீடு அருகிக்கொண்டு வருகிறது.பசியால் வாடும் மனிதனுக்கு போதனை செய்வதால் பயனில்லை என்ற மகாத்மா காந்தியின் கருத்து நாட்டில் நிலைவரம் மேம்பட்டுவருகின்றது என்று அரசாங்க தலைவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் கூறுகின்ற தற்போதைய சூழ்நிலையில் பெருமளவுக்கு பொருத்தமாக இருக்கிறது.

அவர்கள் கூற்றுக்கள் தற்போதைய தருணத்தில் தேர்தல்கள் இதுவரை அடையப்பெற்ற பயன்களுக்கு ஆபத்தை தோற்றுவிக்கும் என்று மறைமுகமாக வாதம் கிளம்புவதற்கு வழிவகுக்கிறது. ஆனால் யதார்த்த நிலை இதற்கு முரணாகவே இருக்கிறது.

அறகலய காலம் தொடக்கம் இன்றுவரை பொருளாதாரம் சுருங்கிக்கொண்டே வருகிறது. பொருளாதாரம் ஒரு திருப்பத்தை இன்னமும் எடுக்கவில்லை. இறுதிக் காலாண்டில் மூன்று சதவீதமாக இருந்த பொருளாதாரச் சுருக்கம் அதற்கு முந்திய காலாண்டில் 11 சதவீதமாக காணப்பட்டது. கடந்தவருடம் அது 7 சதவீதமாக இருந்தது.

தொழில்துறைகள் மூடப்பட்டுவரும் நிலையில் மக்கள் தொடர்ந்து தொழில் வாய்ப்புக்களை இழந்தது வருகிறார்கள் என்பதே யதார்த்த நிலையாகும். தொழில்துறைகள் குறைக்கப்படும் அல்லது மூடப்படும் சூழ்நிலையில் தொழில் சந்தையும் சுருங்குவதையடுத்து மக்கள் கையில் குறைந்தளவு பணமே இருக்கிறது. இந்த குறைந்தளவு பணமும் கூட கடந்த வாரம் இடம்பெற்ற பத்து சதவீத பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலை அதிகரிப்புகளினால் மேலும் குறைகின்றது. இது முழு பொருளாதாரம் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

கடந்த வருடம் 100 -- 200 சதவீதம் உயர்த்தப்பட்ட மின்சாரக் கட்டணம் மேலும் ஒரு 20 சதவீதத்தினால் அதிகரிக்கப்படக்கூடிய சாத்தியம் இப்போது இருக்கிறது.

பெருளாதார நெருக்கடிக்கு முன்னதாக 13 சதவீதமாக இருந்த நாட்டின் வறுமை மட்டம் இன்று 25 சதவீதமாக உயர்ந்து விட்டதாகதாகவும் அது அடுத்தவருடம் 28 சதவீதமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் உலக வங்கி கூறியிருக்கிறது. கிடைக்கின்ற வருமானத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கையைச் சமாளிக்கமுடியாமல் திணறிக்கொண்டிருப்போர் மீது பெருஞ்சுமை ஏற்றப்படுகிறது என்பதே எந்த மறுதலிப்பினாலும் மூடிமறைக்க முடியாத தற்போதையை நிலைவரத்தின் துயரமாகும்.

இந்த சுமைகளை எல்லாம் தாங்கிக்கொண்டு மக்கள் தியாகத்தைச் செய்கின்ற போதிலும், போதுமான வருவாயை அரசாங்கம் திரட்டவில்லை என்றும் கடனுதவியின் இரண்டாவது தவணைக் கொடுப்பனவைப் பெறுவதற்கு அரசாஙகம் நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டியிருக்கிறது என்றும் சர்வதேச நாணய நிதியம் கூறியிருக்கிறது.

இதன் விளைவாக நேரடி வரிகளும் மறைமுக வரிகளும் அதிகரிக்கப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது. மக்கள் மேலும் பிழிந்தெடுக்கப்படப்போகிறார்கள். தற்போது வரிகளைச் செலுத்திக்கொண்டிருக்கும் பெரும்பான்மையானோர் வரி அதிகரிப்புகளுக்கு முன்னதாக கிடைத்த வருமானத்தைக் கொண்டு வாழ்க்கையை வெறுமனே சமாளித்தவர்களேயாவர். மேலும் கூடுதல் வரிகளை அவர்களால் செலுத்தமுடியாது.

வரி அதிகரிப்புகளுக்காக சர்வதேச நாணய நிதியம் அவர்களை இலக்குவைப்பதாக தெரியவில்லை. சனத்தொகையில் மிகவும் வசதிபடைத்த பிரிவினரில் பெரும் பகுதியினரிடமிருந்து அரசாங்கம் வரிகளை அறவிடவில்லை என்பதும் ஊழலையும் வரி மோசடியையும் தடுத்துநிறுத்தவில்லை என்பதே இப்போதுள்ள பிரச்னையாகும். வங்கிகளும் பதிவுசெய்யப்பட்ட பெரிய தொழில் நிறுவனங்களும் மாத்திரமல்ல அரசியல்வாதிகள், தரகுமுகவர்கள், போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பதிவுசெய்யப்படாத தொழிர்துறைகளும் கூட இந்த வரி அறவிடலுக்கு உட்படுத்தப்படாத பிரிவினரில் அடங்குகிறார்கள்.

**சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை**

தற்போது அரசாங்கத்தில் நிலவும் கட்டுப்படுத்தமுடியாத உயர்ந்த மட்ட ஊழலின் விசாலத்தை சுகாதாரத் துறையில் இடம்பெறுகின்ற 'நாடகத்தின்' மூலம் உணர்ந்து கொள்ளமுடியும். மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் சந்தை விலைகளை விட கூடுதல் விலைகளுக்கு தரங்குறைந்த மருந்துவகைகள் கொள்வனவு செய்யப்படுவதாகவும் நாட்டின் உயர்மட்ட மருத்துவ மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் மாதக்கணக்காக முறையிட்டு வருகிறார்கள். ஆனால் அதனால் எந்தப் பயனும் இல்லை.

இந்த முறைப்பாடுகள் குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவிக்கும் மறுப்புக்கள் அருவருக்கத்தக்கவையாக இருக்கின்றன. ஊடக அறிக்கைகளும் மருத்துவ மற்றும் சுகாதார துறைசார் நிபுணர்கள் கூறும் தகவல்களும் ஊழல் தொடருகின்றது என்பதையே காட்டுகின்றன.

சுகாதார அமைச்சருக்கு எதிராக அண்மையில் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கூட கொண்டுவரப்பட்டது. அரசாங்கம் பாராளுமன்றத்தில் அதற்கு இருக்கும் பெரும்பான்மைப் பலத்தின் மூலமாக அதைத் தோற்கடித்தது. அரச சுகாதார சேவையைப் பயன்படுத்துகின்ற மக்களின் நலன்களுக்காக பிரச்னைகளை உரிய முறையில் கையாண்டு தீர்வுகாண்பதற்கு பதிலாக மறுப்புக்கள் தெரிவிக்கப்பட்டு வருவதையே காணக்கூடியதாக இருக்கிறது.

அரசாங்கத்தில் இருப்பவர்கள் தங்கள் மனச்சாட்சியை இழந்துவிட்டார்கள் போன்று தெரிகிறது. முறையான நிருவாகம் நடைபெறுவதை உறுதிசெய்வதற்கு உள்நாட்டில் உரிய கண்காணிப்பு இல்லாதபோது அது வெளியில் இருந்தே வரவேண்டியிருக்கிறது. பொருளாதார நெருக்கடியில் இருந்து தன்னை மீட்டெடுப்பதற்கு இலங்கை பெரிதும் நம்பியிருக்கும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச சமூகத்தின் வடிவில் அந்த கண்காணிப்பு இப்போது மேற்கொள்ளப்படுவதாக தெரிகிறது.

ஆட்சிமுறையின் கடுமையான பலவீனங்களையும் அரச செயற்பாடுகளில் ஆழமாக வேரூன்றிவிட்ட ஊழலையும் கையாளுவதற்கு முன்னுரிமை அடிப்படையில் அரசாங்கம் முன்னெடுக்கவேண்டிய 16 நடவடிக்கைகளை சிபாரிசு செய்து சர்வதேச நாணய நிதியம் அண்மையில் 'ஆட்சிமுறை குறைபாடுகள் கண்டறிதல் மதிப்பீட்டு' அறிக்கை ஒன்றை (**Governance Diagnostic Assesment**) வெளியிட்டிருக்கிறது.



"தற்காலிகமான வரிக்கொள்கை நடைமுறைகளின் விளைவான பரந்தளவிலான ஊழல் மற்றும் ஆட்சிமுறைப் பலவீனங்கள், பணச்சலவைக்கும் நிதியியல் பயங்கரவாதத்துக்கும் எதிரான அரைவேக்காட்டு அணுகுமுறைகள், துடிப்பான சட்டக்கட்டமைப்பு இல்லாதமை, அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை பயன்படுத்துவதில் குறைபாடுடைய செயன்முறைகள், அரசாங்கம் செய்யும் கொள்வனவுகளை ஒழுங்கமைக்க சட்டமூலம் ஒன்று இல்லாதமை, அடிக்கடி வரிச் சட்டங்களை மாற்றியமைக்கும் வகையிலான தற்காலிக வரிக்கொள்கை நடைமுறைகள், ஒய்வூதிய நிதியங்களை மத்திய வங்கி நிருவகிப்பதில் உள்ள நலன்களின் முரண்பாடு, வரித் துறை அதிகாரிகள் மத்தியில் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு தெளிவான பொறிமுறையொன்று இல்லாதமை ஆகியவற்றை கடந்தவாரம் வெளியிடப்பட்ட செயல்நுட்ப உதவி அறிக்கை (**The technical assistance report**) வெளிப்படுத்தியிருக்கிறது" என்று சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் கூறகிறது.

களவாடப்பட்ட நிதிகளை மீட்டெடுப்பதற்கு அரசாங்கம் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது.

அனுமதிக்கக்கடிய உத்தியோகபூர்வ நடத்தைக்கான தெளிவான நியமங்களை தற்போதைய ஆட்சிமுறை ஏற்பாடுகள் நிறுவலில்லை என்றும் தடைகளை மீறுவதைத் தடுப்பதற்கும் களவாடப்பட்டு நாட்டை விட்டு வெளியே கொண்டுசெல்லப்பட்ட பொதுப்பணத்தை தேடிக்கண்டுபிடிப்பதற்கும் அதற்கு பொறுப்பானவர்களை அடையாளம் காண்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் சர்வதேச நாணய நிதியம் கூறியிருக்கிறது.

அரசாங்க நடவடிக்கைகளை மேற்பார்வை செய்விலும் கண்காணிப்பதிலும் சிவில் சமூகத்தின் கிரமமான பங்கேற்பை மட்டுப்படுத்தப்பட்ட வெளிப்படைத் தன்மை கட்டுப்படுத்துகிறது. சகல தரப்பினரையும் அரவணைக்கும் வகையிலான பங்கேற்பு ஆட்சிமுறைக்கான தளம் இல்லாதமை, பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டங்கள் பரந்தளவில் பிரயோகிக்கப்படுதல் ஆகியவையும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

அதிகாரிகளின் தவறான நடத்தைகளுக்கு தண்டனையின்மை தொடருவது அரசாங்கத்துறை மீதான நம்பிக்கையை மலினப்படுத்துவதுடன் தகராறுகளுக்கு தீர்வு காண்பதற்கான சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பயனுறுதியுடைய நியாயாதிக்கச் செயன்முறையையும் சிக்கலாக்குகிறது. நீதித்துறையின் நேர்மையும் கண்ணியமும் பாதிக்கப்படுகிறது என்றும் சர்வதேச நாணயநிதியம் அறிக்கையில் கூறியிருக்கிறது.

**மீண்டும் ஆதரவை பெறுதல்**

இலங்கை இப்போது சர்வதேச சமூகத்தின் ஆதவை இழக்கும் ஆபத்தை எதிர்நோக்குகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு கிடைத்துவிடும் என்று இனிமேலும் மெத்தனமாக நம்பிக்கை வைக்கமுடியாது. அதைப் பெறுவதற்கு ஆட்சிமுறையில் பாரிய மாற்றங்கள் தேவை. குறைந்த பட்சம் அத்தகைய மாற்றங்களைச் செய்யும் திசையில் செயற்பாடுகள் முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டப்படுகிறது என்பதற்கான சான்றாவது தென்படவேண்டும்.

புதிய ஊழல் தடுப்புச்சட்டம் நடைமுறைப்படுத்தப் படவேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் ஒன்று. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் வருடாந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்க நியூயோர்க் சென்றவேளையில் யூ.எஸ்.எயிட் நிருவாகி சமந்தா பவரைச் சந்தித்துப் பேசிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊழலைக் கையாளுவதற்கு காலம் எடுக்கும் என்று கூறினார். முறைப்படியான பயிற்சியைப் பெற்ற உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதில் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு பெரும் சிரமங்களை எதிர்நோக்குகிறது என்று அவர் சமந்தா பவரிடம் தெரிவித்தார்.

இத்தகைய சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது ஊழல் தடுப்பு சட்டத்தின் பயன்களைப் பெறுவதற்கு மேலதிகமாக ஒரு வருடம் தேவை என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியம் இப்போதே மாற்றத்தை கோருகிறது.

1994 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட 1954 ஆம் ஆண்டின் இலஞ்சச் சட்டம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அமைக்கப்படுவதற்கு வழிவகுத்தது. துரதிர்ஷ்டவசமாக கடந்த 30 வருடங்களாக கணிசமான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. எமது பாராளுமன்ற உறுப்பினர்களில் பலரினால் (அவர்களில் சிலர் தற்போதைய பாராளுமன்றத்திலும் இருக்கிறார்கள்) முறைப்படியான துறைசார் பயிற்சியைப் பெற்ற உத்தியோகத்தர்களை ஆட்திரட்ட இயலாமல்போனது ஒன்றும் ஆச்சரியத்தைத் தரவில்லை.

நாடு எதிர்நோக்குகின்ற பன்முக நெருக்கடிகளுக்கு அரசாங்கத்தின் பதில் அவற்றை நிராகரிப்பதாகவே இருக்கிறது. தற்போது பாராளுமன்றத்தின் முன்னால் உள்ள உத்தேச இரு சட்டமூலங்கள் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தையும் போராட்டத்தை நடத்துவதற்கான உரிமையையும் ஒடுக்குவதற்கு அரசாங்கத்துக்கு கூடுதல் அதிகாரத்தை வழங்கும். பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமும் இணையவெளி பாதுகாப்பு சட்டமூலமுமே அவையாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டிடபிள்யூ. ஜேர்மன் தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டி நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பெருமளவு சர்ச்சையை தோற்றுவித்திருக்கிறது.

நாடு எதிர்நோக்கும் பாரதூரமான பல பிரச்சினைகள் பற்றி கேள்விகளை எழுப்பிய ஜேர்மன் செய்தியாளர் விக்கிரமசிங்கவை ஒரு நெருக்கடியான சூழ்நிலைக்குள் தள்ளிவிட்டார். சிறுவர்கள் மத்தியிலான ஊட்டச்சத்து குறைபாடு, கடந்த கால மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணை போன்ற பிரச்சினைகளும் அவற்றில் அடங்கும்.

பாதுகாக்க முடியாததை ஜனாதிபதி அந்த பேட்டியில் பாதுகாக்க வேண்டியதாயிற்று. அந்த பிரச்னைகளை தோற்றுவித்தவர்களைக் கொண்டிருக்கும் ஆட்களுடன் பணியாற்றுவதற்கு தீர்மானித்த ஜனாதிபதியினால் அவற்றுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு உருப்படியாக எதையும் செயயமுடியாது என்பதுவே அடிப்படை உண்மை.

சர்வதேச நாணய நிதியமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் வலியுறுத்துவதைப் போன்று பொருளாதாரக் குற்றங்களுக்காகவோ அல்லது போர்க் குற்றங்களுக்காகவோ எவரையும் பொறுப்புக் கூறவைக்கக்கூடிய மனநிலையில் அரசாங்கத்தை அமைத்திருக்கும் பாராளுமன்றப் பெரும்பான்மை இல்லை என்பதே ஜனாதிபதி முன்னால் உள்ள வேதனைக்குரிய யதார்த்தமாகும்.

இத்தகைய சூழ்நிலையில் சர்வதேச நாணயநிதியத்தின் கடனுதவியின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையையும் மேலும் கஷ்டமாக்கலாம். நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் பாதகமாக அவை கிடைக்காமலும் போகலாம்.

பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மை ஜனாதிபதி பின்பற்ற வேண்டியிருக்கும் சீர்திருத்தப் பாதையை பின்பற்றுவதற்கு தயாரில்லை என்றால் தன்னுடன் ஒத்துழைக்க மறுத்துநிற்கும் பாராளுமன்றத்தைக் கலைப்பது குறித்து மேலும் காலந்தாமதிக்காமல் கலைப்பது குறித்து அவர் பரிசீலிக்கவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமாக இலங்கையை தற்போதைய இருளில் இருந்து வெளிச்சத்துக்கு கொண்டுவருவதற்கு ஒத்துழைத்துப் பணியாற்றக்கூடிய புதியவர்களும் ஊழல் குறைந்தவர்களுமான பிரதிநிதிகளை மக்கள் தெரிவுசெய்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம். ●

# தேர்தலை பிற்போடும் எண்ணம் ஜனாதிபதி ரணிலுக்கு இல்லை!

## ஐக்கிய தேசிய கட்சி



கொழும்பு, ஒக். 11

ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்தில் இடம்பெறும். தேர்தலை பிற்போடும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை. அத்துடன் தம்மிக பெரேரா ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவது அவரது உரிமை. என்றாலும் அவர் ஒருபோதும் ரணில் விக்ரமசிங்கவுக்கு சவாலாக அமையப்போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் விஜயமன்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்த வில் நேற்று செவ்வாய்க்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக எதிர்க்கட்சியினர் தெரிவித்து வருகின்றனர். அவ்வாறான எந்த எண்ணமும் அரசாங்கத்துக்கோ ஜனாதிபதிக்கோ இல்லை. அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருடமே இடம்பெற இருக்கிறது. அதனால் உரிய காலத்தில் தேர்தல் இடம்பெறும்.

அத்துடன் அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி எவ்வாறு தயாராகப்போகிறது. அதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பாக கடைசியாக இடம்பெற்ற கட்சியின் செயல்குழுவின் போது நாங்கள் அது தொடர்பாக கலந்துரையாடி இருந்தபோதும். அதனால் எதிர்க்கட்சிகள் தங்களின் பிரசாரத்துக்காக, எந்த அடிப்படையும் இல்லாத விடயங்களை தெரிவித்து மக்களை குழப்பி வருகின்றனர்.

அத்துடன், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கி, ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் திடடமிட்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்திருந்தார். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான எந்த யோசனையும் தெரிவிக்கப்பட வில்லை. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இருக்கின்றபடியாலே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு நாட்டை கட்டியெழுப்புவதற்கான தீர்மானங்களை விரைவாக முன்னெடுக்க முடியுமாகி இருக்கிறது.

அதனால், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை தற்போதைக்கு இல்லாமல் ஆக்க எந்த திட்டமும் இல்லை. ஆனால், நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாமலாக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும். அதனால், எதிர்காலத்தில் அனைவருடனும் கலந்துரையாடி இது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளலாம்.

மேலும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாக தம்மிக்க பெரேரா தெரிவித்திருக்கிறார். அது அவருடைய உரிமை. அவரைப் போன்று ஜனாதிபதியாக கனவு காண்பவர்கள் பலரும் இருக்கின்றனர்.

என்றாலும் வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை மீட்பதற்கு யாரும் முன்வராத நிலையில் இந்த நாட்டை மீண்டும் ஸ்திரமான நிலைக்கு கொண்டுவர யார் நடவடிக்கை எடுத்தார் என்பது மக்களுக்கு தெரியும். அதனால் தமிக்க பெரேராவோ அல்லது வேறு யாராக இருந்தாலும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு அவர்கள் யாரும் சவாலாகப்போவதில்லை - என்றார். (ஐ)

## அஞ்சல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் விசேட நிகழ்வு

மட்டக்களப்பு, ஒக். 11

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு பிரதம தபாலகம் ஏற்பாடு செய்த சர்வதேச அஞ்சல் தின விசேட நிகழ்வு நேற்று முன் தினம் காலை இடம் பெற்றது.

மட்டக்களப்பு பிரதம தபாலக தபாலதிபர் மயில் வாகனம் ஜெயரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட நிகழ்வில் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ் .ஜெகன் பிரதமஅதிதியாக கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் இவ்வருடத்தில் தபால் சேவையை மேலும் வலுவூட்டும் பொருட்டு பணியாளர்கள் தபால் உத்தியோகத்தர்கள் அடங்கலாக சத்திய பிரகடனமும் இங்கு செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து மாநகர வீதிகளில் பயணித்த மக்களுக்கு சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பால் சோறு மற்றும் குளிர்பானங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது .

இந்நிகழ்வில் வர்த்தக ராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்து சிறப்பித்தார். (அ)

## அரசு வழங்கிய மோ. சைக்கிள்களை உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை

மட்டக்களப்பு, ஒக். 11

2014/2015 வரவு-செலவு திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தலின் கீழ் வெளிக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்காக வழங்கப்பட்டுள்ள மோட்டர் சைக்கிள், ஸ்கூட்டர் போன்றவற்றை 05 ஆண்டுகளின் பின்னர் உரிமை மாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகளை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வரவு - செலவு திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதன் கீழ் 05 வருடங்கள் கடந்ததன் பின்னர் நிபந்தனைகளை நீக்கி முழு உரித்தினை உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (அ)

